Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 13 ஆம் நாள் | ரபி ஆகிர் 18 | (2[illegible]-9-61) | வெள்ளிக்கிழமை | இதழ் 195

நீங்கள் அணியும் ஆடைகள் தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல் இன்றே!

டொலர் அடையாளமிட்ட நீலம் வாங்கி உபயோகியுங்கள்

விநியோகஸ்தர்கள்:

டொலர் கோப்பரேஷன்

14, டாம் வீதி, கொழும்பு.

# ஸிரிய ராணுவ கலகம் முடிவடைந்தது

## ஐக்கிய அராபிய குடியரசு தளபதியுடன் உடன்பாடு

### ஒற்றுமையைக் காக்க ஜனதிபதி நாசர் உறுதி

டமாஸ்கஸ், செப். 28

சிரியாவில் ஏற்பட்ட ராணுவக் கலகம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாயும், ஐக்கிய அராபியக் குடியரசுப் படைத் தளபதிக்கும், கலகம் செய்த ராணுவத்தினருக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாயும், அதிகாரத்தை மீண்டும் ஐ. அ. குடியரசு தளபதியிடம் கலகக்காரர்கள் ஒப்படைத்துவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

முன்வந்த செய்தி

எகிப்தும் சிரியாவும் இணைந்த ஐக்கிய அரபுக் குடியரசில் சிரியாவிலுள்ள ராணுவ அணிகள் திடீரெனப் புரட்சியொன்றை ஆரம்பித்து டமாஸ்கஸ் வானொலி நிலையத்தையும் கைப்பற்றிக்கொண்டன.

ராணுவக் கலகத்தை அடக்குவதற்காக எகிப்திலிருந்து ஐக்கிய அரபுக் குடியரசுப் படைகள் டமாஸ்கஸுக்கு சென்றுகொண்டிருக்கின்றன.

சிரியாவில் ராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ளதை டமாஸ்கஸ் வானொலியில் புரட்சிக்காரர்கள்தான் முதலில் அறிவித்தனர்.

சிரியா பிராந்திய ராணுவ அணிகள் ஆரம்பித்துள்ள கலகத்தை அடக்குவதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு படைகள் டமாஸ்கஸுக்குச் சென்றுகொண்டிருப்பதாக ஜனதிபதி நாஸர் இன்றுகாலை வானொலியில் தெரிவித்தார்.

ஐக்கிய அரபுக் குடியரசின் ஒற்றுமையைக் குலைத்து சிரியாவைத் தனியாகப் பிரித்துவிடலாமென்று கலகத்துக்குக்காரணமாகவுள்ள ராணுவ அதிகாரிகள் கருதினல் அது தப்புக்கணக்காகவே முடியும் என்று ஜனதிபதி கேணல் அப்துல்கமால் நாஸர் தெரிவித்தார்.

ஒற்றுமை மிகவும் அவசியமான இச்சமயத்தில் தேச ஒற்றுமையைச் சீர்குலைக்கச் செய்யும் முயற்சி வெளிநாட்டு ஆக்கிரமிப்பைவிட மிக மோசமான செய்கை என்று ஜனதிபதி நாஸர் கூறினர்.

ஐக்கிய அரபுக் குடியரசின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்குத் தாம் உறுதிகொண்டிருப்பதாகவும் கேணல் நாஸர் சொன்னர்.

ஐக்கிய அரபுக் குடியரசின் உதவி ஜனதிபதியாக விருந்த சிராஜ் நேற்றுமுன்தினம் தமது பதவியை ராஜினமாச்செய்ததும் அவர் சிரியாவைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

## ஸிரியாவில் நடப்பதென்ன?

லண்டன், செப். 28

ஸிரியாவில் உண்மையில் என்ன நடக்கிறதென்பதே தெரியவில்லை. அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் முன்னுக்குப்பின் முரணுக இருக்கின்றன. அங்கு தந்தி, டெலிபோன் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. கலகக்காரர்களின் ஆதிக்கத்தில் இருப்பதாய்க் கூறப்படும் டமாஸ்கஸ் ரேடியோ ஒன்றிலிருந்துதான் செய்திகள் கிடைப்பதாகத் தெரிகிறது. இந்தரேடியோச் செய்திக்கும் ஜனதிபதி நாஸரின் அறிக்கைக்கும் வித்தியாசம் இருப்பதாய்க் கூறப்படுகிறது.

## நீதிமன்றத்தில் தமிழில் விசாரணை செய்யலாமா?

### மல்லாகம் கோர்ட்டில் தோன்றிய பிரச்சினை

மாவிட்டபுரம், வியாழன்

நீதிமன்றத்தில் சாட்சியை தமிழில் குறுக்குவிசாரணை செய்யலாமா?

இந்தப் பிரச்னை நேற்று மல்லாகம்நீதிமன்றத்தில் கிளம்பியது.

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாயும் மூவருக்குக் காயம் உண்டுபண்ணியதாகவும் ஐவர்மீது குற்றஞ்சாட்டிச் சுன்னுகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் வழக்காளிதரப்பில் ஆஜரான திரு. டி. கணேசலிங்கம் ஒரு சாட்சியை தமிழ்மொழியில் விசாரணைசெய்ய எத்தனிக்கையில் எதிரிதரப்பு வழக்கறிஞர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

இவ் வழக்கில் அளவெட்டியைச் சேர்ந்த கனகசபை நற்குணசிங்கம், கனகசபை அருளம்பலம், தாமோதரம்பிள்ளை பரநிருபசிங்கம், அம்பலம் கனகசபை, செல்லப்பா கைலாசபிள்ளை ஆகிய ஐவரும் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி கணபதி கந்தன், கணபதி சீனியன், பெரியான் கணபதி ஆகிய மூவரையும் அலவாங்காலும் பொல்லுகளாலும் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இவ் வழக்கு ஆரம்பமானதும் வழக்காளிதரப்பில் ஆஜரான திரு. கணேசலிங்கம் கணபதி சீனியன் என்ற சாட்சியை ஆங்கிலத்தில் விசாரணை செய்தார். அதேபோல் எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். கண்ணுத்துரையும் அதே சாட்சியை ஆங்கிலத்தில் குறுக்கு விசாரணை செய்தார். வழமைபோல் ஆங்கில மொழியில் சாட்சியிடம் கேட்கப்படும் கேள்விகளை நீதிமன்ற முதலியார் தமிழில் மொழிபெர்த்தார். இரண்டாவது தடவையாக திரு. கணேசலிங்கம் அதே சாட்சியை புனர் விசாரணை செய்தபோது சாட்சியம் சில கேள்விகளைத் தமிழில் கேட்டார். இதற்குக் காரணம் தெரிவிக்கையில் இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளும் வழக்காளிகளும் தமிழர்கள் என்றும் மேலும் இவ் வழககில் சாட்சியம் அளிப்பவர் தமிழ்மொழி பேசுவதால் தான் அச் சாட்சியை (கணபதி சீனியனை) தமிழ் மொழியிலேயே கேள்வி கேட்க விரும்புவதாகவும் திரு. கணேசலிங்கம் நீதிபதியிடம் தெரிவித்தார்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் இதை ஆட்சேபிக்கையில் நீதிமன்றங்களில் தமிழ்மொழியை உபயோகிப்பதற்குத்தமிழ் மொழிக்கு அவ்வந்தஸ்து கொடுக்கப்படாததால் அம் மொழியில் சாட்சியை கேள்விகள்கேட்பதற்கு அதிகாரம் இல்லையெனவும் நீதிபதியிடம் கூறினர்.

நீதிபதியின் அனுமதியுடன் தமிழ்மொழியில் சாட்சியை விசாரணை செய்வதற்கு தனக்கு அதிகாரம் இருக்கிறது என்றும் உயர்தர நீதிமன்றங்களில் கூட சாட்சியைத் தமிழில் விசாரணைசெய்வதற்குத் தமக்கு அதிகாரம் உண்டு என்றும் திரு. கணேசலிங்கம் நீதிபதியிடம் தெரிவித்தார்

நீதிபதி தமது அனுமதியுடன்சாட்சியைத் தமிழில் விசாரணை செய்யலாம் எனத் தெரிவித்து அதற்கு அனுமதி வழங்கினர்.

சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையின் உதவியுடனும் திரு. ஏ. நித்தியானந்தனின் அனுசரணையுடனும் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

எதிரிகள் தரப்பில் திரு. என். நடராஜாவின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை, திரு. எஸ். இராசரத்தினம் ஆகியோர் ஆஜரானர்கள்.

## 6 காஞ மந்திரிகள் ராஜினமா செய்வர்?

ஆக்ரா, செப். 28

காஞ ஜனதிபதி நிக்ரூமா, தனது 6 மந்திரிகளை ராஜினமாச் செய்யும்படி கேட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## வர்த்தக ஊழியருக்கு இரட்டைச்சம்பள உயர்வு

கொழும்பு, வியாழன்

இரட்டைச் சம்பள உயர்வு கொடுப்பது சம்பந்தமாக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துடன் கூட்டுஒப்பந்தத்துக்கு வந்துள்ள வர்த்தக ஸ்தாபனங்களை, சகல வர்த்தக ஸ்தாபனங்களும் பின்பற்ற வேண்டுமென சங்கம் கேட்டுக்கொள்ளவிருக்கிறது. இந்த ஒப்பந்தம் முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பாகப்பிரதிநிதித்துவம் வகித்த ஸ்தாபனங்களுக்கு மட்டுமின்றி சகல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும் என வர்த்தக ஊழியர் சங்கக் காரியதரிசி திரு. பாலாதம்பு கூறினர்.

பொருளாதார ரீதியில் தங்களால் முடியாவிட்டால் மட்டுமே சம்மேளனத்தில் அங்கத்தினராய் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் புதிய உயர்ந்த சம்பளத்தை மறுக்கமுடியும்.

## 10 வருட கடுங்காவல் சிறை

### நாவாந்துறை கொலைவழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவாந்துறை கொலை வழக்கில் எதிரியான சின்னப்பன் சிவகுரு என்ற 26 வயதான வாலிபருக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றம் நேற்று 10 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

"காலையில் சென்று தொந்தரவு செய்து மாலையில் திட்டமிட்டு வந்து பாரதூரமான கொலைக் குற்றத்தைச் செய்திருக்கிருய். ஆனல் நீ ஓர் அதிர்ஷ்டசாலி. இந்த வழக்கில் ஜூரர்கள் உனக்காக இரக்கம் காட்டியிருக்கிருர்கள். ஜூரர்களின் ஏகமனதான முடிவைக் கௌரவித்தே இத்தீர்ப்பை வழங்குகிறேன்." இவ்வாறு தமது தீர்ப்பை வழங்கும் போது எதிரியைப் பார்த்து நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. கூறினர்.

கைமோசக் கொலைக் குற்றம் புரிந்ததாக ஜூரர்கள் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இத்தீர்ப்பை நீதியரசர் வழங்கினர்.

சென்ற பெப்ரவரி மாதம் 21-ந் திகதி நாவாந்துறை பீச்ரோட்டில் வசிக்கும் முருகுப்பிள்ளை குலவீரசிங்கம் என்பவரைக் கொலை செய்ததாகச் சின்னப்பன் சிவகுரு என்பவர் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் வழக்கை நடத்தினர் திரு. ஆர். விசுவநாதன், திரு. ஜே. டபிள்யூ. சைமன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. எஸ். ஆனந்தகுமாரசாமியுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் எதிரி தரப்பில் வாதாடினர்.

## க்ஷயரோக கொடிதினம்

வலிகாமம், வியாழன்

வருகிற 30-ம் தேதி இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் சார்பாக கொடித்தினம் அனுஷ்டிக்கப்படுவதால், இதற்கு தாராளமாக நிதி உதவி வழங்குமாறு வலிகாமம் மேற்கு கிளை, மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

## புலியினல் மக்கள் கிலி!

முள்ளியவளை, வியாழன்

குமாரபுரப் பகுதியில் புலி ஒன்று நடமாடுவதாகச் சொல்லப்படுகிறது. அது ஒரு மாட்டைக் கொன்று தின்றதை, நேரிற் கண்ட ஒருவர் கூறினர். அப்பகுதிமக்கள் இது பற்றி கலக்கத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

## அரசாங்க முடிவை ரத்து செய்யாது

கொழும்பு, வியாழன்

வைத்திய சோதனையில் தேறிய பட்டதாரிகளை அரசாங்க ஆஸ்பத்திரியில் 5 வருடம் சேவை செய்வதற்கான உறுதிப் பத்திரத்தில் கையெழுத்திடவேண்டும். அல்லது 10,000 ரூபாய் கட்டவேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் முடிவை அரசாங்கம் எக்காரணத்தை முன்னிட்டும் ரத்துச் செய்யாது, என அறிவிக்கப்பட்டது.

## கமிட்டி செயல்படவில்லை

கொழும்பு, வியாழன்

சர்வகலாசாலைக்கான பாடப் புத்தகங்களையும், இதர புத்தகங்களையும் சுயபாஷையில் மொழிபெயர்ப்பதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிட்டி செயல்படவில்லை கடந்த ஆண்டு அது ஒரு இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தபின், திரும்பக் கூடவே இல்லை.





உ
சிவமயம்

**ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான**
**கோடியர்ச்சனை விஞ்ஞாபனம்**

ஆரம்ப தினம்: 23—10—61
பூர்த்தி தினம்: 5—2—62

இந்த அர்ச்சனையில் யந்திரத் தகடு வைத்து பூஜை செய்து கொடுக்கப்படும்.

சி. பாலசுப்ரமணியக் குருக்கள்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### காமெரா திருத்துதல்

உங்கள் 'காமெரா'க்கள் எதுவாயிருந்தாலும் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் திருத்துவதற்கு, 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### Private Tution

S. S. C. ஆங்கிலம் — தமிழ், J. S. C. ஆங்கிலம் — தமிழ், ஆகிய பரீட்சைகட்கோ லண்டன் சர்வகலாசாலை G. C. E. Adv: Level — B. A. பரீட்சைக்கோ தோற்றும் மாணவ மாணவிகட்கு ஆங்கிலம், கணிதம், சமஸ்கிருதம், தமிழ், இந்து சமயபாடம், சரித்திரம், ஆகிய பாடங்களில் வேண்டிய உதவி தகுந்த தராதரம் பெற்ற ஒருவரால் அளிக்கப்படும். விரும்பினால் வீட்டுக்குச் சென்று படிப்பிக்கலாம். விபரங்களுக்கு: பெட்டி என் 24, c/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

### தேவை

இலங்கை முழுவதிலும் விஸ்தரிப்பாளர்களாகவும் பிரதிநிதிகளாகவும் கடமையாற்றக்கூடிய கண்ணியமும் செல்வாக்குமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. வடக்கு, மாகாணங்களில் உள்ளோரின் விண்ணப்பங்கள் விசேடமாகக் கவனிக்கப்படும். இந்தோ சிலோன் பெனிவிற் சொசைற்றி லிமிட்டெட், கண்டி வீதி, கொடிகாமம்.

### அறிவித்தல்

கே. கே. எஸ். ரோட், நிர். 424-ம் இல்லத்தில் வசிக்கும் திரு. நமசிவாயம் எங்களது வடமாகாண பிரதேச நடவடிக்கை உத்தியோகஸ்தராக இம் மாதம் 23-ந் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். இங்ஙனம், (ஒப்பமிடப்பட்டுளது) நா. தி.பிரான்ஸிஸ் ஸேவியர், அத்தியட்சகர், இன்சேட்ஸ் செக்குரிட்டி அன் சேவிஸ் ஒவ் ஸிலோன் லிமிட்டெட்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### வாடகைக்கு

சிறு வியாபாரமோ, கைத்தொழிலோ நடாத்தக் கூடிய இருஅறைக்கடையும்அத்துடன் இணைந்த தங்கும் விடுதியும் வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டுமே தங்க வசதி உண்டு. விபரத்திற்கு: எஸ். வேலுப்பிள்ளை, வியாபாரம், 478, கே. கே. எஸ். வீதி, (சிவலிங்கப்புளியடி), யாழ்ப்பாணம்.


# புத்தர்வழியைப் பின்பற்றிய பண்டாரநாயக்கா

கொழும்பு, புதன்

காலம்சென்ற பிரதமா திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஒருசிங்கள இளவரசன் அவர் வெளிநாட்டிலே கல்வி சயின்றார். இங்கு வந்ததும் சௌகரியங்களையும் வசதிகளையும் கவனியாது தமது நேரத்தையும் பணத்தையும் தியாகம் செய்து மக்களின் நலன்கருதி வாழத்தொடங்கினார்.

இவ்வாறு அத்தனகலையிலுள்— ஆசிரியர் திரு. டி. எவ். அத்துக்கொருலை காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு: ஆர். டி. பண்டாரநாயக்கா பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது: 'காலஞ்சென்ற பிரதமர் வலதுசாரி, இடதுசாரித் தீவிரவாதக் கொள்கைகளையும் பின்பற்றாது புத்த பகவான் காட்டிய மத்திய வழியைப் பின்பற்றினார். அவர் பொது மக்களுக்காக உழைத்தார். அவர் இறந்தபோது அகில உலகமுமே அவருக்கு அஞ்சலி செலுத்தியது.

பிரதமர் தமது குறுகியகாலப் பதவிக் காலத்தில் நாட்டுக்கு பெரும் சேவை செய்தார். அவர் சிங்களத்தை நாட்டின் தேசிய மொழியாக்கினார். கட்டுநாயக்கா விமானத் தளத்தையும் திருக்கோணமலைத் தளத்தையும் பிரிட்டிஷாரிடமிருந்து பெற்றார். இரு பல்கலைக்கழகப் பிரிவெனாக்களை நிறுவினார். தொழிலாளர்களுக்கு அவர்களுக்குரிய இடமளித்ததும் அவரே.

**கிரிக்கட்**

# சனசமூகநிலையம் வெற்றி

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய இளைஞர் விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்கும், தொல்புரம் தெற்கு இளைஞர் விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே அண்மையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் மத்திய சனசமூகத்தினர் 22 ரன்களாலும் 17 விக்கட்டுகளாலும் வெற்றிபெற்றனர்.

திரு. ந. தங்கவேலாயுதம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# டட்லி சோதிடம் பொய்த்துவிடும்

## வாலிபர் மன்றத்தில் என். எம். பேச்சு

எட்டியாந்தோட்டை, வியாழன்

"வருகிற பெப்ரவரி மாதத்தில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமென திரு. டட்லி சேனநாயக்கா கூறிய சோதிடம் பொய்த்துவிடும். சில சிறிய பிரச்சினைகளையொட்டியே யு. என். பி. செய்த பெரிய தவறுகள் யாவற்றையும் தமது நினைவுக்குக் கொண்டுவருமாறு பொதுமக்களை நான் கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா கிற்றுகலை எல். எல். எஸ். பி. வாலிபர் மன்றத்தின் கூட்டத்துக்குத் தலைமைவகுத்துப் பேசுகையில் கூறினார். டாக்டர் என். எம். தொடர்ந்து பேசியதாவது:

மூன்று கோறளைகளிலுள்ள காணியில்லா மக்களுக்குக் காணி தேடி வழங்குவதற்கு நான் 1936-ம் ஆண்டுதொடக்கம் முயற்சித்துவந்தேன். ஆனால் 1956ம் ஆண்டில்தான் காணியில்லா மக்கள் காணியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்தது. இவ்வாறு வசதி ஏற்படுத்திய திரு. எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு எமது நன்றியைச் செலுத்த வேண்டும். அவர் அரசியலில் இறங்கிய போது மூன்று கோறளை மக்கள் மனித உரிமையற்று வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது அவர்களால் தமது உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழமுடிகின்றது. இவர்களது உரிமைகளைப் பெறுவதற்கென நடாத்திய போராட்டங்களில் 1956-ல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏகமனதான தேர்தல் யு. என். பி. யை விழுத்துவதற்கு உதவியது. 1956-க்குப் பின்னர் ஓரளவுக்கு வேலைகள் நடந்திருக்கின்றன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

பஸ் தேசியமயமாகியபின் சரியானமுறையில் நடாத்தப்பட வில்லை என்றாலும் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் பஸ் சேவையில் அதிக திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

1960-ல் எல். எல். எஸ். பி. தேர்தலில் வெற்றியடைந்து அரசாங்கப் பதவியை பெற்றிருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கம் ஓரளவுக்குச் செய்த முயற்சிகள் மக்களின் மனதைக் கவர்ந்திருந்தால் எல். எல். எஸ். பி. யை அவர்கள் உதாசீனம் செய்தனர்.

இன்றைய அரசாங்கம் துரிதமாகச் செயலாற்றாத காரணத்தாலேயே அதன் செல்வாக்குக் குறைந்து வருகிறது. நாம் கூறுவதெல்லாவற்றையும் அரசாங்கம் கேட்டுவருகின்றதெனினும் திறமையாகச் செயலாற்றுவதற்கு அதற்குப் போதிய வல்லமையில்லை."

# புசல்லாவையில் நினைவு தினம்

## தொழிலாளருக்கு முழுநாட் சம்பளம்

புசல்லாவை, புதன்

புசல்லாவைப் பகுதியில், காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகாவின் நினைவு தினம் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. எல்லா மதத்தைச் சேர்ந்த தேவாலயங்களிலும் விசேட பூசைகளும், பிரார்த்தனைகளும் நடைபெற்றன. கடைகள், கல்லூரிகள், அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இப்பகுதிகளில் உள்ள தோட்டத்தொழிலாளர்களுக்கு அரைநேரம் மாத்திரம் இன்று வேலை கொடுக்கப்பட்டது. அரைநேரம் வேலை செய்தவர்களுக்கு எல்லா தோட்டங்களிலும் இன்று முழுநாள் சம்பளம் கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

# கோழிகளைத் திருடாதே!

## மாஜிஸ்டிரேட் புத்திமதி

குருநாகல், வியாழன்

"குற்றப்பணம் செலுத்த வேண்டுமென்பதற்காக நீ இன்னும் கோழிகளைக் களவெடுக்கக்கூடாது என்று நான் உன்னை எச்சரிக்கை செய்கின்றேன்."

இரண்டு கோழிகளைக் களவெடுத்ததாக எஸ். மாரிமுத்து என்பவர் கொக்கிரல்ல பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் ரூ. 40 குற்றப்பணம் செலுத்தும்படி உத்தரவிட்டபோதுதான் மாஜிஸ்திரேட் மேற்கண்டவாறு கூறினார்.

**மாஜிஸ்திரேட்**: 'மற்றவர்களுடைய கோழிகளை களவாடுவதை விட்டு உனக்கு வேறு வேலை இல்லை?"

**எஸ். மாரிமுத்து**: இதைப் போன்ற ஒரு செயலை நான் முன்னர் ஒருபோதும் செய்ததில்லை. ஆனால் எனது பெற்றோர்கள் வறியவர்கள். நான்தான் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

**மாஜிஸ்திரேட்**: "இதற்காக நீ ஒரு கோழிக்கள்ளனாகவேண்டுமா? மற்றவர்களின் கோழிகள் உனக்கு உரித்தல்ல! நேர்மையான ஒரு தொழிலில் இறங்கி உன் பெற்றோர்களுக்கு உதவி செய்."

மாரிமுத்துவை மாஜிஸ்திரேட் ரூ. 40 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டு, கோடு கலையும்வரை காவலில் இருக்கும்படி உத்தரவிட்டார். அபராதத்தைச் செலுத்த ஒரு மாதத் தவணை அவருக்கு அளிக்கப்பட்டது.

# பஸ்ஸில் இறந்தார்

புசல்லாவ, வியாழன்

கம்பளையிலிருந்து புசல்லாவைக்கு இ. போ. ச. பஸ் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு நபர் பஸ்ஸின் 'ஸீற்' ஒன்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

65 வயதுள்ள அறகம் அசாரி என்ற அந்த நபர் கம்பளையிலிருந்து புசல்லாவைக்குச் செல்வதற்காக ஒரு டிக்கட்டை வாங்கி, பஸ்ஸின் கடைசி ஸீற்றில் உட்கார்ந்தார்.

அந்த பஸ் குறிக்கப்பட்ட இடத்துக்குச் சென்ற சமயம் அவர் ஸீற்றில் நித்திரை செய்துகொண்டிருப்பவர் போல் காணப்பட்டார். அப்பொழுது கண்டக்டர் அவரை நெருங்கி, பஸ்ஸை விட்டு கீழே இறங்கும்படி சொன்னார். ஆனால் அவர் அதற்கு பதில் ஏதும் சொல்லவில்லை. சந்தேகப்பட்ட அவர்கள் பஸ்ஸை புசல்லாவை பொலிஸ் நிலையத்துக்கும் பின்னர் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கும் எடுத்துச் சென்றனர்.

ஆஸ்பத்திரியில் அவரைப் பரிசோதித்துப் பார்த்தபொழுது அவர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# வான் விபத்து

நக்குவானை, வியாழன்

வீதியால் சென்றுகொண்டிருந்த 'வான்' ஒன்று அவ்வீதியை விட்டு விலகி கவ்டு வெவவிலுள்ள ஒரு வயலொன்றில் வீழ்ந்தது.

அந்த வானில் பிரயாணம் செய்த ஆறு பேரும் பலமான காயங்களுடன் கஹவத்தை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.


விற்பனையாகிறது!

N. P. T. A. & N. C. T. T. A.
5ஆம் வகுப்புப் பரீட்சை 1961

தமிழ்
மேற்படி பாடத்தில் தவறாது சித்தியடைவதற்கு

**கலைவாணியின்**
**தமிழ்மொழிப் பயிற்சி**
**DESK WORK IN TAMIL**

5ஆம் வகுப்புப் பாடநூலைப் படிக்கத் தவறாதீர்கள். அநேக விளக்கங்கள், மாதிரி அப்பியாசங்கள் படங்கள் மூலம் கொடுக்கப்பட்டுள்ளன.

விலை 1-80

**கலைவாணி புத்தக நிலையம்**
10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
130, திருக்கோணமலை வீதி, கண்டி.

படைகுறைப்பு பேச்சுவார்த்தைகளில்

# நடுநிலைமை நாடுகளும் சேர்க்கப்படவேண்டும்

## ஐ. நா. வுக்கு 'ஐக்'!

வாஷிங்டன், செப். 26

ஐ நா. சபையின் தற்காலிக பொதுக் காரியதரிசியாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் ஐஸனோவரை நியமிக்கலாமென்று நியுயோர்க் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஜேக்கப் ஜேவிட்ஸ் யோசனை தெரிவித்துள்ளார்.

ஐ நா. பொதுக் காரியதரிசி பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் தெரிவுசெய்யப்படும்வரை ஜெனரல் ஐஸனோவரை தற்காலிகமாக நியமிப்பது, மனித குலத்தின் சமாதான நம்பிக்கைக்கு உத்தரவாத மளிப்பதாக இருக்கும் என்று அவர் கூறினர்.

## அல்ஜீரிய பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கும்?

பாரிஸ், செப். 28

அல்ஜீரியப் பிரச்னை சம்பந்தமாக மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பிரஞ்சு அரசாங்கமும் அல்ஜீரிய தேசியத் தலைவர்களும் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அல்ஜீரியா சம்பந்தமாக ஈவியானில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததற்கு சகாரப் பிரச்னை காரணமல்ல என்று பிரஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டிகோல் நேற்று தெரிவித்தார்.

மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அதில் சலந்துகொள்ள தாங்கள் தயாராக இருப்பதாத அல்ஜீரிய தேசியத் தலைவர்கள் நேற்று டூனிஸில் தெரிவித்தனர்.

## ஐ. நா. சபையில் திரு. பீலிக்ஸ் உரை

### சீனவுக்கு ஐ. நா. வில் இடம் அளிக்க கோரிக்கை

நியூயார்க், செப். 28

படைகுறைப்பு பேச்சுவார்த்தைகளில் இனி நடுநிலைமை நாடுகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று இலங்கை நிதிமந்திரியும் பாதுகாப்பு வெளிவிவகார உதவிமந்திரியுமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா நேற்று ஐ. நா. மகாசபையில் பேசுகையில் கூறினர்

அணு ஆயுத பரிசோதனை பற்றி திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் நிலத்திற்குக் கீழேயானலும் மேலேயானலும் அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்வது கூடாது என்பதே இலங்கையின் கொள்கை என்ருர். அணு ஆயுத சோதனைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று அவர் கூறினர்.

பெர்லின் பிரச்சினைபற்றி திரு. பண்டாரநாயக்கா குறிப்பிடுகையில் இப்பிரச்னை இன்று மிக நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளதென்ருர். பெர்லின் பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சிசெய்கையில் ஒரு உண்மையை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று அவர் சொன்னர். இரண்டுஜெர்மனிகள் இப்பொழுது இருப்பதுஉண்மை. இந்த உண்மையை ஒப்புக்கொண்டு தானகவேண்டும் என்று திரு. பீலிக்ஸ் தெரிவித்தார். மேற்கு பெர்லின் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொண்டால் பிரச்னையை சுமுகமாகத்தீர்த்து விடலாமென்று அவர் தெரிவித்தார். தங்கள் வாழ்க்கை முறையை மேற்கு பெர்லின் மக்கள் தாங்களே தீர்மானித்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென்று இலங்கை நிதி மந்திரிகூறினர்.

ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி பதவிக்கு ஒருவரே நியமிக்கப்படவேண்டுமென்பதுதான் இலங்கையின் விருப்பமென்று கூறிய திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தனி ஒருவர் இப்பதவியை வகித்தால்தான் சிறந்தமுறையில் தமது அலுவல்களைக் கவனிக்கமுடியுமென்ருர்.

காலனி ஆதிக்கம் பற்றியும் திரு. பீலிக்ஸ் தமது பேச்சில் குறிப்பிட்டார். அங்கோலாவில் ஆயிரக்கணக்கான மக்களை போர்ச்சுக்கீஸியர் கொன்று குவிக்கின்றனரென்றும் போர்ச்சுக்கீஸியர் மிருகத்தனமாக நடந்துகொள்கின்றனரென்றும் திரு. பீலிக்ஸ் கண்டித்தார். காலனி ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று அவர்கேட்டுக்கொண்டார்.

### சீனவுக்கு அங்கத்துவம்

ஐ. நா. வில் நவசீனவுக்கு அங்கத்துவமளிக்கப்பட வேண்டியது அவசியமென திரு. பண்டாரநாயக்கா கூறினர். அறுபதுகோடி மக்களைக்கொண்ட நவசீனவுக்கு உலக ஸ்தாபனத்தில் இடமளிக்காமல் நாஷனலிஸ்டுசீன என்றஒன்றுக்குஇடமளித்து வைத்திருப்பது உலக ஸ்தாபனத்தையே கேலிக் கூத்தாக்குவதாகும் என்று திரு. பீலிக்ஸ் கூறினர்.

## படைகுறைப்புக்கு ரஷ்யாவின்திட்டம்

### "அந்நிய பிரதேசத்திலுள்ள படைகள் வாபஸாகவேண்டும்"

நியூயோர்க், செப். 28

**படைகுறைப்புக்கான எட்டுஅம்சத்திட்டமொன்றை சோவியத் யூனியன் ஐ. நா. மூலம் வெளியிட்டுள்ளது.**

**அந்நிய பிரதேசங்களிலுள்ள தங்கள் துருப்புக்களை வல்லரசுகள் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள அம்சங்களில் ஒன்று.**

ஆரம்ப நடவடிக்கையாக, ஜெர்மனியிலுள்ள படைகளை மூன்றிலொன்ருகக் குறைக்க வேண்டுமென்பது மற்ரெரு அம்சம்.

சகலநாடுகளும் படை நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டுமென்றும், படைச்சாதனங்களின் உபயோகத்தை உடனடியாக நிறுத்தவேண்டுமென்றும் துருப்புக்களை வெளியே அனுப்புவதை நிறுத்தவேண்டுமென்றும் இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## காங்கோ பிரதமரை சந்திக்க ஷோம்பே தயார்

எலிஸபெத்வில்லி, செப். 28

கருத்து வேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு காங்கோ பிரதமர் திரு. அடௌலாவை நடுநிலைமைப் பிரதேசமொன்றில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் தாம் தயாராகஇருப்பதாய் கடாங்கா அதிபர் ஷோம்பேஅறிவித்தார்.

சாலிஸ்பரி, அன்டோலா அல்லது லண்டன் ஆகிய இடங்களை தாம் சந்தித்துப் பேசுவதற்கு விரும்பும் இடங்களென ஷோம்பே தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை எதுவும் கடங்காவின் அரசியல் சுதந்திரத்தை பாதிக்காதவையாகத் தானிருக்க வேண்டு மென்றும் கடாங்காவின் அரசியல் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டே இப்பேச்சுவர்ர்த்தைகளில் கருத்து வேற்றுமைகளைத் தீர்த்துக் கொள்ளலா மென்றும் திரு. ஷோம்பே கூறியுள்ளார்.

காங்கோவின் மத்திய அரசாங்கத்துடன் பொருளாதார ஒப்பந்தமொன்று செய்துகொள்ள தாம் தயாரக இருப்பதாகவும் திரு. ஷோம்பே அறிவித்தார்.

### தாச்சி விளையாட்டுச்சுற்றுப் போட்டி

மானிப்பாய், வியாழன்

வலிகாமம் மேற்கு கிராமாவிருத்திச் சங்க சமாஜத்தினர் தாச்சி விளையாட்டுச் சுற்றுப் போட்டியொன்றை நடாத்த முடிவு செய்திருக்கின்றனர். இச் சுற்றுப் போட்டி மிகவிரைவில் ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

### கதிரியக்க வீழ்ச்சி அதிகரித்திருப்பதாக

### ஜப்பான், இத்தாலி அறிவிப்பு

வாஷிங்டன், செப். 27

சோவியத் யூனியன் அணு ஆயுத பரிசோதனைகளை மீண்டும்ஆரம்பித்ததால்பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள ஜப்பானிலும் இத்தாலியிலும் கதிரியக்க வீழ்ச்சி அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

வடஜப்பானிலுள்ள ஹிரோசாகாய் பல்கலைக் கழகத்தில் கதிரியக்க வீழ்ச்சி 900 சதவிகிதமாக அதிகரித்துள்ளதாக பதியப்பட்டுள்ளது அதே போல் வட இத்தாலியில் கதிரியக்க வீழ்ச்சி ஐம்பதிலிருந்து எழுபது சத விகிதமாக அதிகரித்துள்ளதாக ரோமாபுரி பத்திரிகையொன்று அறிவித்துள்ளது.

## தாராசிங்குக்கு விக்கல் எடுக்க ஆரம்பித்துவிட்டது

அமிர்தசரஸ், செப். 28

பஞ்சாபிசுபா கோரிக்கைக்காக சென்ற 46 தினங்களாக உண்ணாவிரதமிருந்துவரும் அகாலி டால் இயக்கத் தலைவர் மாஸ்டர் தாராசிங்கின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டதாகவும் அவரின் நிலைமை கவலையளிப்பதாகவும் நேற்று மாலை வெளியான வைத்திய அறிக்கையொன்று கூறுகிறது.

தாராசிங்குக்கு சில சமயங்களில் விக்கல் எடுக்க ஆரம்பித்துள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிக்கிறது.

தாராசிங்கின் உண்ணாவிரதத்துக்குப் போட்டியாகவிருக்கும் யோகிராஜ் சூரியதேவின் உடல் நிலையும் மோசமடைந்துள்ளதாகவும் அவர் எடை மேலும் குறைந்து அதிகம் பலவீனமடைந்திருப்பதாகவும் டாக்டர்களின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

ஹமர்ஷீல்ட் மரணம்

# சர்வதேசரீதியில்விசாரணை செய்யவேண்டும்

## ஐ. நா. வுக்கு நான்கு நாடுகள் கோரிக்கை

நியுயோர்க், செப். 28

ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்குக் காரணமாக விருந்த விமானவிபத்துபற்றி சர்வதேச ரீதியில் பூரண விசாரணை நடத்துவது சம்பந்தமாக ஐ. நா. மகாசபை பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தியா, கானு, ஐக்கிய அரபுக் குடியரசு, வெனிசுலா ஆகிய நான்கு நாடுகளும் கோரியுள்ளன.

இவ்விஷயம் ஐ. நா. மகாசபை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவேண்டுமென்றும் இதற்கு முக்கியத்துவமளிக்கப்படவேண்டுமென்றும் நான்குநாடுகளும் கோரியுள்ளன.

திரு. ஹமர்ஷீல்ட் சென்ற விமானத்துக்கு விபத்து ஏற்பட்ட சூழ்நிலை பற்றியும் அவர் இரவில் பிரயாணம் செய்யவும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்படுவதற்குரிய காரணங்கள் பற்றியும் விசாரணை நடைபெறவேண்டுமென்றும் நான்கு நாடுகளும் வேண்டிக்கொண்டுள்ளன.

இதுசம்பந்தமாக நான்கு நாடுகளும் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்குக் காரணமாகவிருந்த விமான விபத்து பற்றி பாரபட்சமற்ற முறையில் சர்வதேச ரீதியில் விசாரணை நடத்த வேண்டுமென்பதே உலக மக்களின் அபிப்பிராயமென்று தெரிவித்துள்ளன.

### இமயமலையின் உயரம் என்ன?

### போலந்து அளவிடும்

வார்சா, செப். 28

திபெத்பக்கமாக இமயமலையின் உயர்த்தை அளப்பதற்கு மலையேறும் கோஷ்டியொன்றை போலந்து தயார்செய்துவருகிறது. 1964-ம் வருடத்தில் இமயமலையின் உயரத்தை அளக்கும் இம் முயற்சி மேற்கொள்ளப்படும்.

### அமெரிக்க ஆயுத கட்டுப்பாடு ஸ்தாபன தலைவராக

### திரு. பொஸ்டர் நியமனம்

வாஷிங்டன், செப். 28

அமெரிக்க ஆயுத கட்டுப்பாடு ஸ்தாபனமும், ஆயுத பரிகரண ஸ்தாபனமும் அமெரிக்க அரசாங்க இலாகாவின் ஒரு பகுதியாக்கப்பட்டுள்ளது.

இப்புதிய ஸ்தாபனத்தை ஏற்படுத்த காங்கிரஸ் சபை நிறைவேற்றிய மசோதாவில் ஜனாதிபதி கென்னடி செவ்வாயன்று கையெழுத்திட்டார். முன்பு பொருளாதார ஒத்துழைப்பு நிர்வாகத்தின் (மாஷல் திட்டம்) பிரதம நிர்வாகியாக இருந்த திரு. வில்லியம் ஸி. போஸ்டரை ஜனாதிபதி இதன் டைரக்டராக நியமித்துள்ளார்.

அமெரிக்க ஆயுத பரிகரணத்தில் தனது இலட்சியத்தை அடைய இப்புனித ஸ்தாபனம் மேலும் உதவுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

### குரோமிக்கோ-டீன் சந்திப்பு

நியுயோர்க், செப். 28

சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிகோக்ரவும் அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க்கும் நேற்று இரண்டாவது தடவையாக நியுயோர்க்கில் சந்தித்து நான்குமணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பெர்லின், ஜெர்மன் பிரச்னை சம்பந்தமாக தாங்கள் பேசியதாக திரு. டீன்றஸ்க் பின்னர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவர்கள் மீண்டும் சனிக்கிழமை சந்தித்துப் பேசுவர்.

### மணிவாக்கு

எவன், தனக்குத்தானே சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ அவனே சுதந்திர புருஷன்.

—காந்திஜி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 13 உ (29-9-61)

EEL NADU: National Tamil Da y Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.

## புதுடில்லி மகாநாடு

புதுடில்லியில் கூடியிருக்கும் ஆசிய பொருளாதார திட்ட மகாநாட்டில் பிரதமர் நேரு கூறியுள்ள பல நல்ல யோசனைகள் நம் இலங்கைக்கு மிகவும் பயன்படவேண்டும். இந்தியா இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி இப்போது மூன்றாவது திட்டத்தை நடத்துகின்றது. சில தவறுகளை இந்தியா செய்துள்ளதென்றாலும் சில வெற்றிகளையும் அது ஈட்டியுள்ளதாயும் திட்டம் அமைத்து நடத்துவதில் தனது அனுபவத்தை மற்றவர்களுடனே மகிழ்ச்சியுடன் பங்கிட்டுக்கொள்ள இந்தியா தயாரென்றும் நேருஜி கூறுகின்றார். திட்டம் அமைத்து நடத்த முயலும் இலங்கை இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள அதிக இடமுண்டு.

பூகோள அமைப்பின்படி நம் இலங்கை, அண்டையிலுள்ள இந்தியாவுடனேயே பெரிதும் பிணைக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் அந்நியருக்கு அடிமைப்பட்டு சமீபத்தில் தான் அரசியல் விடுதலை பெற்றன. இரு நாடுகளின் பல பிரச்சினைகளும் அநேகமாக ஒரே மாதிரித்தான். ஆகவே அப்பிரச்சினைகளையும் சிறப்பாக பொருளாதார பிரச்சினையையும் தீர்த்துக்கொள்வதில் இந்தியாவின் அனுபவமும் முன் மாதிரியும் நமக்குப் பெரிதும் உதவியாக இருக்கவேண்டும் கைத்தொழில் அபிவிருத்தியில் இந்தியா சென்ற 10 ஆண்டுகளில் மிகவும் முன்னேறியுள்ளது. ஆனால் நாமோ மிகப் பின் தங்கியிருக்கிறோம். நமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்ள இந்தியாவின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாம் நாடிப் பெறமுடிந்தால், நமது முன்னேற்றமும் வேகமானதாக இருக்கும்.

ஒரு திட்டத்தின் வெற்றி மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பில்தான் தங்கியுள்ளதென்று சரியாக அறிவுறுத்துகின்றார் நேருஜி. "ஒரு சிலரது லாபத்துக்கும் நன்மைக்குமன்றி, தங்களது பொது நன்மைக்காகவே ஒரு திட்டம் அமுல் நடத்தப்படுகிறதென்று மக்கள் உணர்ந்தாலல்லாது அவர்களது நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற முடியாது" என்று எச்சரிக்கிறார் அவர். புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பவர்கள் நேருஜியின் இந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்ய முடியாது.

புதிதாக விடுதலை அடைந்த ஆசிய நாடுகள் மூலதனத்துக்கு மேற்கு நாடுகளையே எதிர்நோக்கியுள்ளன. மேலும் பல பல அரசியல் முதலிய பிரச்சினைகள் இந்நாடுகளைப் பிளவுபடுத்தியிருப்பதைப் பார்க்கிறோம். வடக்கு கொரியாவுடன் கலாசார உறவை வளர்க்க வேண்டுமென்று கேட்டதற்காக தென் கொரியாவைச் சேர்ந்த 9 மாணவருக்கு ஐந்து வருட முதல் ஆயுள் காலம் வரை சிறைத்தண்டனை, தென்கொரிய இராணுவக் கோர்ட்டாரால் விதிக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்தியா-பாகிஸ்தான், வியட்னம்-வியட்மின் முதலிய நாடுகள் பிளவுபட்டு ஒன்றுக்கொன்று விரோதிகளாக எதிர்த்து நிற்கையில் பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படுவது மிகவும் துர்லபம். நல்ல வேளையாக இலங்கைக்கு வெளி விரோதிகள் இல்லை. ஆனால் உள்நாட்டில் சமூக ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிகவும் தேவைப்படுகின்றது. இதுபற்றிய பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதுடன், இலங்கை இந்தியர் பிரச்சினையையும் மனிதாபிமானத்துடன் சீக்கிரத்தில் தீர்க்க முடிந்தால், இந்தியாவின் பூரண உதவியுடன், இலங்கை சுபிட்ச பாதையில் துரிதமாக முன்னேற முடியும்.

புதுடில்லியில் நடைபெறும் இந்த மகாநாடு வெறும் பேச்சுடன் முடிந்துவிடாமல், பல ஆசிய நாடுகளும் பரஸ்பர நன்மைக்காக ஒத்துழைத்து, மக்களுக்கு நல்ல பலன் ஏற்படுமென்றே நம்புவோம்.

# அணுகுண்டு ஆராய்ச்சியை ரஷ்யா ஆரம்பித்ததேன்?

**அணுகுண்டு சோதனையைத் தானாகவே முன்வந்து நிறுத்திய ரஷ்யா மீண்டும் அச்சோதனையை ஆரம்பிக்கக் காரணம் என்ன? கட்டுரையைப் படித்துப்பாருங்கள்.**

இரண்டாவது உலக மகாயுத்தம் எந்த எந்த ஜெர்மன் மண்ணில் முடிந்ததோ அதே ஜெர்மன் மண்ணில் எந்த நிமிடமும் மூன்றாவது உலக மகா யுத்தம் தொடங்கலாம் என்ற ஒரு அபாய நிலை இன்று உருவாகி இருக்கிறது. பிரிட்டனில் உள்ள நார்போக் என்ற இடத்தில் ஏவுகருவி தளம் ஒன்றை அமைத்து அங்கே அறுபது ஏவுகருவிகளை அமெரிக்கா பொருத்தி வைத்திருக்கிறது யுத்தம் தொடங்கிய நான்கே நிமிடத்தில் யூரால் மலைக்கு மேற்கே உள்ள ஐரோப்பிய ரஷ்யா முழுவதையுமே அழித்துவிடும் ஆற்றல் பெற்றவை அந்தக் கருவிகள் எனக் கூறப்படுகிறது. இதே போல் பிரிட்டனை நான்கே நிமிடத்தில் தரைமட்டமாக்கிவிடும் ஆற்றல் வாய்ந்த ஏவுகருவிகளை தன் நாட்டில் ரஷ்யா பொருத்தி வைத்திருக்கிறதாம். 7,500 மைல் தூரம் பறந்து சென்று அமெரிக்காவின் எப் பகுதியையும் தாக்கி அழித்துவிடும் ஆற்றல் பெற்ற ஏவுகருவிகள் ரஷ்யா வசம் இப்பொழுது உள்ளன. இதனால் இந்நிலையில் உலகப்போர் என்றால் தற்கொலைக்கு ஒப்பாகும் எனக் கருதியே இரண்டு வல்லரசுக் கோஷ்டிகளும் மேற்கொண்டு அணு ஆயுத சோதனை செய்வதை தாங்களாகவே நிறுத்தி வைத்தன. ஆனால் இப்பொழுது மீண்டும் பழைய போட்டி தொடங்கி விட்டது. இதற்கு உண்மைக் காரணம் என்ன?

அமெரிக்கக் கோஷ்டியைச் சேர்ந்த நாடு பிரான்சு. அது மேற்கு ஜெர்மனி அரசாங்கத்தின் தொழில் நுணுக்க ஒத்துழைப்புடன் தொடர்ந்து அணு ஆயுத சோதனை நடத்தி வருகிறது. அதைத் தடுக்க அமெரிக்காவோ பிரிட்டனோ முயலவில்லை. அவைதான் பிரான்சையும் மேற்கு ஜெர்மனியையும் மறைமுகமாகத் தூண்டிவிட்டுச் சோதனை நடத்தச் சொல்லுகின்றன. ஆகையால் தான் மட்டும் அணு ஆயுத சோதனையை நிறுத்தி வைத்தது முட்டாள்தனம் என நினைக்கிறது ரஷ்யா. இதில் நியாயம். இல்லாதில்லை.

### மற்றொரு காரணம்

ரஷ்யா அணுகுண்டு சோதனையை ஆரம்பித்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு வானவெளி விஞ்ஞானத்தில் ரஷ்யா அமெரிக்காவை மிஞ்சி விட்டது உண்மைதான். ஆனால் அணுகுண்டுத் துறையில் அமெரிக்காவைவிட ரஷ்யா பின் தங்கியே நிற்கிறது. வான வெளி விஞ்ஞானம் ரஷ்யாவுக்கு பாதுகாப்பு அளித்துவிட முடியாது. ஆகையால் அணுகுண்டுத்துறையில் அமெரிக்காவை எட்டியாவது பிடித்துவிட வேண்டும். அதுவே தனக்குப் பாதுகாப்பு என அது நினைக்கிறது. இதுவும் இயல்பேயாகும். மேற்படி இரண்டு விஷயங்களையும் நம் பிரதமர் நேருஜியிடம் குருஷேவ் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார். நேருஜியும் குருஷேவ் கூறுவதில் உள்ள நியாயத்தை உணர்ந்திருக்கிறார்.

### மெகாடன் குண்டு

1952 நவம்பரில் அமெரிக்கா 5 மெகாடன் ஹைட்ரஜன் குண்டு ஒன்றை வெடித்துச் சோதனை நடத்தியது. ஒரு மெகாடன் என்பது லட்சம் டன்னுக்குச் சமம். 1954 மார்ச்சில் அமெரிக்கா 15 மெகாடன் ஹைட்ரஜன் குண்டை வெடித்தது. ஆனால் 1957 மேயில் தான் ரஷ்யா 5 மெகாடன் குண்டை வெடித்தது. அதன் பிறகு அணுகுண்டு சோதனையையே அது நிறுத்திவிட்டதாகையால் அத்துறையில் அமெரிக்காவுக்கு அது பின் தங்கி நிற்கிறதென்பது வெளிப்படை. பெர்லின் நிலை மோசமாகிக் கொண்டுவரும் நிலையில்தான் அத்துறையில் பின்தங்கி நிற்பது சரியல்ல என ரஷ்யா நினைத்தது இயல்பேயாகும்.

### பரஸ்பர அச்சம்

20 மெகாடன் குண்டு ஒன்று 80 சதுரமைல் பரப்பில் எதுவுவே இல்லாமல் சர்வநாசம், 20 சதுரமைல் பரப்பில் பெரும் சேதம், ஆயிரம் சதுரமைல் பரப்பில் சாதாரணச் சேதம் விளைவிக்கும் அவ்வளவு ஆற்றல் பெற்றது. 20 மெகாடன் குண்டு ஒன்றுக்கு ஆயிரம் சதுரமைல் பரப்பில் சேதம் விளைவிக்கும் ஆற்றல் உண்டு என்றால் ரஷ்யா இப்பொழுது தயாரிக்க முனைந்துள்ள நூறு மெகாடன் குண்டு எவ்வளவு நாசத்தை விளைவிக்கும் ஆற்றலைப் பெற்றதாக இருக்கக் கூடும் என நாம் சிந்திக்கவே பயமாக இருக்கிறது. இவ்வளவு பயங்கர நாச சக்திகளை உற்பத்தி செய்வதும் அதற்காகக் கோடிக்கணக்கில் பணத்தை விரயம் செய்வதும் பயித்தியக்காரத் தனத்தைத் தவிர வேறு எதுவுமாக இருக்க முடியாது என்பதை இரண்டு வல்லரசுகளும் உணர்ந்திருக்கின்றன. அதை வெளிப்படையாகக் கூறவும் செய்கின்றன. ஆனால் செயல் முறையில் எதுவும் நடப்பதில்லை. காரணம் பரஸ்பர அச்சமும் சந்தேகமும் தான். அது அகன்றாலொழிய உலகுக்கு விமோசனமோ விடிவோ ஏற்படப் போவதில்லை.

# தண்ணீர் திட்ட வேலைகளை ஆரம்பிக்குமாறு மாநகரசபை கோரிக்கை

கண்டி, வியாழன்

கண்டியின் பிரதான தண்ணீர்த் திட்டவேலைகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வது என்னும் தீர்மானம் ஒன்று கண்டி மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. நகரசபை மாதாந்தக் கூட்டத்துக்கு கண்டி மேயர் சேர் பெனட் சொய்சா தலைமை வகித்தார்.

நிறைவேற்றிய அத்தீர்மானம் வருமாறு:-

"கண்டி மாநகரத்துக்குத் தேவையான தண்ணீரை உதவக்கூடிய திட்டமொன்றையும் அமைப்பதற்குத் தேவையான செலவின் தொகையையும் எமது நகரசபையும் அரசாங்கமும் அங்கீகரித்துள்ளன. ஆகையால் இத்தண்ணீர்த் திட்ட வேலைகளை உடனடியாகவே ஆரம்பிக்குமாறு இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

இத் தீர்மானத்தை திரு. ஏ. எஸ். கருணாரத்ன பிரேரித்தார். மராமத்து இலாகாத் தற்காலிக மந்திரி திரு. டி. பி. தென்னக்கோனும் நகரசபைக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார். தற்காலிக மந்திரி அங்கு பிரசன்னமாகியிருந்தது மகிழ்ச்சிக்குரியது என்றும் தண்ணீர்த் திட்ட வேலை விரைவில் ஆரம்பிப்பதற்கு வேண்டியவற்றை செய்யுமாறும் திரு டி. பி. தென்னக்கோனை, திரு எஸ். கருணாரத்தின கேட்டுக் கொண்டார். திரு. தென்னக்கோனும் தீர்மானத்தை ஆதரித்து தம்மால் இயன்றவரை திட்டவேலைகளை விரைவில் ஆரம்பித்து வைப்பதற்கு முயற்சியெடுப்பதாக வாக்களித்தார்.

## இலங்கை தேயிலை

### செக். அதிகம் வாங்கும்

செக்கோஸ்லவேக்கியா செ. 28

'எங்கள் நாடு எதிர்காலத்தில் இலங்கையிடமிருந்து அதிக தேயிலையை வாங்கும்' என செக்கோஸ்லவேக்கியாவின் வெளிநாட்டு வர்த்தக மந்திரி திரு. எவ். கிரேஜர் பேர்னே இங்குள்ள வர்த்தக மார்க்கட்டைத் திறந்துவைத்த பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கையின் பிரதிநிதியாக பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட திரு. பியசிறீ குணரத்ன இலங்கையிடமிருந்து செக்கோஸ்லவேக்கியா தேயிலை வாங்குமா என்று கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி கூறியதாவது:

'செக்கோஸ்லவேக்கிய இலங்கையிடமிருந்து குறிப்பிட்ட தொகையான தேயிலை வாங்கி வந்துள்ளது. எதிர்காலத்தில் இந்தத் தொகை அதிகரிக்கும். இதே நேரத்தில் இலங்கையிலுள்ளவர்களுக்குத் தேவையான பொருள்களை இங்கிருந்து ஏற்றுமதி செய்யவும் நாம் தயாராக இருக்கிறோம். சீனி தேவையாக இருந்தால் நாம் சீனி அனுப்பி வைக்கலாம். ஏனெனில் செக்கோஸ்லவேக்கியா சீனி ஏற்றுமதி செய்வதில் முக்கிய இடம் வகுக்கிறது.

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை ஒரு வெள்ளைக்கார மதபோதகர் வந்தார். அவரது சொந்த நாடு ஆஸ்திரேலியாவாம். இலங்கை வந்து பத்து ஆண்டுகளாவதாகவும் மதபோதனை செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளதாகவும் சொன்னார்.

ஆஸ்திரேலியாவில் வெள்ளை வர்ணாசிரமதர்மத்தைப் பற்றிக் கேட்டேன். அந்த விஷயம் அவருக்கு சற்றே எக்கச்சக்கமாக இருந்தது. அங்கு நிற வெறி இல்லை என்றும், ஆனால் பொருளாதார அந்தஸ்தை காத்துக்கொள்ள ஆசியா மக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாயும் கனடாவைப் போல் "கோட்டா" முறையில் ஆசியா நாட்டு மக்களுக்குக் குடியேற அனுமதியளிப்பதைத் தாம் ஆதரிப்பதாயும் சொன்னார்.

ஆனால் அங்குள்ள பூர்வ குடிகளுக்குமிகவும் அநீதிசெய்யப்பட்டுள்ளதாக அவரே ஒப்புக் கொண்டார்.

* * *

ஆஸ்திரேலிய பூர்வகுடியான சுதேசி ஒருவரை மூன்று வருடங்களுக்கு முன்பாக ஸ்விட்சர்லாந்திலே ஒரு சர்வதேச மகாநாட்டில் சந்தித்தேன். பார்ப்பதற்கு ஒரு சாதாரண இந்தியர் மாதிரியே இருந்தார். அவரது மனைவி வெள்ளை நிறம். அழகான குழந்தை இனிமையான குரலில் அருமையாகப் பாடி, எல்லோருடைய கரகோஷங்களையும் பாராட்டுதலையும் பெற்றுவிட்டார்.

ஆஸ்திரேலியாவில் பூர்வ குடிகள் பல லட்சம் பேர் இருந்ததாயும், படிப்படியாக அவர்கள் அழிக்கப்பட்டு இப்போது ஒரு சில ஆயிரம் பேர்களே உள்ளதாயும் அவர் கூறிய கதைகளைக் கேட்டு திடுக்கிட்டேன்.

நானும் ஒரு வெள்ளைக்கார வாலிப டாக்டரும் ஒரே அறையில் இருந்தோம். அறைக்கு வந்ததும், அந்த வெள்ளைக்கார வாலிபர், ஆஸ்திரேலிய பூர்வ குடிகளுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளுக்காக விம்மி அழுதார்.

இந்தச் சம்பவத்தை அந்த ஆஸ்திரேலிய மத போதகரிடம் கூறி, ஆஸ்திரேலியாவிலேயே இருந்து அந்த பூர்வ குடிகளின் கண்ணீரைத் துடைக்கும் கைங்கரியம் செய்வது அதிக முக்கியமும்பயனுமுள்ளதாக இராதா? என்று கேட்டேன் அவர் பேச்சை மாற்றிவிட்டார்.

* * *

ஸ்பெயினிலே தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் கொடுமைப்படுத்துவதாகக் கூறி ஒரு கட்டுரையைக் காட்டினார். அவர் அதைப் படித்து திடுக்கிட்டேன்.

புதுடில்லியிலே நடைபெறும் ஆசிய பொருளாதார மகாநாட்டில் நேருஜி பேசுகையில், இன்று உலகிலுள்ள போட்டி வல்லரசுகளின் போக்கு 12ம் நூற்றாண்டிலே தாண்டவமாடிய மதவெறிப் போட்டியைப் போலுள்ளதென்றும், தங்கள் மதத்தைச் சேர்ந்தவரெல்லாரும் "ஹீதன்" (காட்டுமிராண்டிகள்) என்று அக்காலத்தில் வெறுத்து ஒதுக்கினரென்றும் குறிப்பிட்டார்.

ஆனால் அந்த ஆஸ்திரேலிய அன்பர் கூறியது மெய்யானால் அந்த பழைய மதவெறிகள் இன்னும் மறையவில்லையென்றே தோன்றியது.

இந்த மதவேற்றுமைகளெல்லாம் மாறி, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனுமாக' ஏற்படும் காலம் எப்போதோ?

# வான் சேவையை இ.போ.ச.மேற்கொள்ளும்

கொழும்பு, வியாழன்

அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து தனிப்பட்ட வான் சேவையை இ. போ. ச. வின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர தொழில் தேசியமயசேவைமந்திரி திரு. எம். டி.' சற். ஸ்ரீவர்த்தன ஏற்பாடு செய்துவருகிறார்.

மந்திரி இதற்காக அரசாங்கத்திடம் அங்கீகாரம் கோரியிருப்பதுடன் இதுபற்றி இ. போ. ச, கமிஷன் அங்கத்தவர்களிடமும் மோட்டார் போக்குவரத்து இலாகா அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தில் இத்தீர்மானத்துக்கேற்ப திருத்தத்தைச் செய்வதற்கான ஏற்பாட்டைச்செய்யுமாறு மோட்டார் போக்குவரத்து கமிஷனரிடம் மந்திரி அறிவித்துள்ளார்.

மந்திரி இதுபற்றித் தெரிவித்திருப்பதாவது:-

'இந்தத்திட்டம் அமுலுக்கு வந்ததும், தனிப்பட்டவான்கள் இ. போ. ச. தயாரிக்கும்நேரத் திட்டத்தின்படியும், அவர்கள் விதிக்கும் கட்டணத்தின் பிரகாரமுமே செயற்படவேண்டும்.

பெரிய பஸ்கள் செல்வதால் செலவு அதிகரிப்பதாக இருக்கும் பாதைகள் ஊடாக வான்கள் போக்குவரத்து சேவை செய்வதற்கு ஏகபோக உரிமை வழங்கப்படும்.

இந்தப் பாதைகள்மூலமாகச் செல்லும் பஸ்கள் நிறுத்தப்பட்டு அதிக பிரயாணிகள்செல்லக்கூடிய பாதை வழியாகச் செல்ல ஒழுங்கு செய்யப்படும்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இவற்றை செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

# “சுகாதாரக் கல்வி சமுதாய விருத்திக்கு உதவவேண்டும்”

## ஆசிரியர்களுக்கு வைத்திய அதிகாரி அறிவுரை

நீர்கொழும்பு, வியாழன்

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குச் சுகாதாரக் கல்வி அளிப்பதற்கெனப் பள்ளிக்கூட சுகாதாரக் கமிட்டிகளை உருவாக்க வேண்டும் என்று கொழும்பு வித்தியாவைத்திய அதிகாரி டாக்டர் ஜி. நெயர் நீர்கொழும்பில் முதல் தடவையாக நடைபெற்ற பள்ளிக்கூட சுகாதார பயிற்சி மகாநாட்டில் வலியுறுத்தினர். இப்பயிற்சி மகாநாடு நீர்கொழும்பில் தொடர்ந்து இரு நாட்களாக நடைபெற்றது. டாக்டர் நெயர் மேலும் கூறியதாவது: பிள்ளைகளின் உடல் வளர்ச்சியைத் தூண்டும் நோக்கத்துடனேயே பள்ளிக்கூடங்களில் சுகாதார கல்வி அளிக்கப்படல் வேண்டும். சுகாதாரக் கல்வி பிள்ளைகளின் உள்ளமும் உடலும் உணர்ச்சிகளும் சமுதாயத்தில் பின்பற்ற வேண்டிய முக்க வழக்கங்களும் விருத்தியடைவதற்கு உதவ வேண்டும். பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்குச் சுகாதாரக் கல்வி அளிப்பது சனத்தொகையில் பெரும் பகுதிக்கு சுகாதாரக் கல்வியளிப்பதாகும்.

மாணவர்களுக்குச் சுகாதார முறைகளைக் கற்றுக் கொடுப்பதற்கு வகுப்பு ஆசிரியர்களே முதன்மையானவர்கள். எனவே சுகாதாரக் கல்வியளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

ஆரம்ப பள்ளிக்கூடங்களில் சுகாதார பழக்கங்களைக் கற்றுக் கொடுக்கும் முழும் பொறுப்பும் வகுப்பு ஆசிரியரையே சார்ந்தது.

கனிஷ்ட பாடசாலைகளில் இதற்கெனப் பிரத்தியேக ஆசிரியர் ஒருவரை நியமிப்பது நன்மை பயக்கும். அவர் விசேஷ பயிற்சி உடையவராக இருக்க வேண்டும். தமது கடமையைச் சரிவரச் செய்வதற்கு அவர் தமது சொந்த வாழ்க்கையிலும் சுகாதார வாழ்க்கையின் இலட்சியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

# பரிசுபெற்ற எழுத்தாளருக்கு

## மேயர் பாராட்டுக் கடிதம்

யாழ்ப்பாணம், வியாழன்

சாகித்தியமண்டலத்தின் பரிசுபெற்ற எழுத்தாளர் திரு. டொமினிக் ஜீவாவுக்கு யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா பாராட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். யாழ்ப்பாண நகரசபையின் சார்பில் அவர் திரு. ஜீவாவை வாழ்த்தியிருப்பதுடன் அவருடைய முயற்சி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புதிய ஊக்கத்தையும், புதிய மலர்ச்சியையும் உண்டாக்குமெனத் தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# “குடிபோதையில் வந்த கணவர் எங்களை வணங்கச் சொன்னர்”

## விசாரணையின்போது மனைவி கூற்று

கண்டி, வியாழன்

கண்டியிலிருந்து பத்துமைல் தூரத்திலுள்ள மெயிலபிட்டியா என்ற இடத்தில் 5 குழந்தைகளுக்குத் தந்தையான ஒருவர் குடிபோதையில் அவரது மனைவியை அடித்துவிட்டு. மறுநாள் அவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

36 வயதுள்ள ஆர். சர்னலிஸ் அப்புஹாமி என்ற அந்த நபர், குடிபோதையில் வீட்டுக்கு வந்து விறுந்தையில் நித்திரை செய்யப்போவதாகச் சொன்ன சமயம் அவருடைய மனைவி அதற்கு ஆட்சேபம் தெரிவித்தாராம். அதைத் தொடர்ந்து அவரது மனைவியை அவர் அடித்துவிட்டு அடுத்தநாள் மரமொன்றில் சுருக்கிட்டுத்தற்கொலை செய்து கொண்டார்.

மரணவிசாரணையின் போது இறந்தவரின் மனைவியான எச். ஏ. மிஸிநோனு என்பவர் பின்வருமாறு கூறினர்.

“எனது கணவர், சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வீட்டுக்கு வந்தார். அவர் குடித்துவிட்டுத்தான் வந்திருக்கிறர் என்பதை நான் தெரிந்துகொண்டேன். பின்னர் அவர் 5 மணிக்கு வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார்.

பின்னர் சுமார் 7 மணிக்கு அவர் வீடுதிரும்பினர். தமது பின்னல் கட்டிலை விறுந்தைக்கு எடுத்துச் சென்று குழந்தைகள் எல்லோரையும் தம்மை வணங்கும்படி கேட்டார். அப்படியே குழந்தைகள் அவரை வணங்கினர். பின்னர் என்னையும் முழந்தாளில் நின்று வணங்கச் சொல்லிக் கேட்டார். நானும் அப்படியே செய்தேன்.

இதற்குப் பின்னர் என் கணவர் கதவைத் தாழிட முயற்சித்தார். அதை நான் ஆட்சேபித்தேன். என்னை அவர் அடித்தார். நாங்கள் எல்லோரும் படுக்கைக்குச் சென்றுவிட்டோம். அடுத்த நாட்காலை எனது கணவரைக் காணுது திகைத்து நின்றேன். அறிவித்தலின் பேரில் நான் சென்று பார்த்தசமயம் எனது கணவர் சுருக்கிட்டு இறந்து கிடந்தார்.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எச் ஆர். கே. பண்டா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# ரூ. 18 கோடி

லாகூர், செப். 28

சூருவளியினல் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிழக்குப் பாகிஸ்தானின் கரையோரப் பகுதிகளின் சீர்திருத்தத்துக்கும் அபிவிருத்திக்கும் 18 கோடி ரூபாய் செலவிடப்படுமென கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் தெரிவித்தார்.

# “திரைப்படத்தொழிலை தேசியமயமாக்கினல் உருப்படாது!”

## நடிகர் மனேகர் கருத்து

### அரசியல், நாடகம், தணிக்கை பற்றியும் அவர் தகவல் தருகிறர்

நாடகக் கலையை சினிமா கொன்றுவிட்டதா?

இக் கேள்விக்கு பிரபல தென்னிந்திய நடிகர் 'இலங்கேஸ்வரன்' மனேகர் ஒரே வார்த்தையில் 'இல்லை' என்று பதிலளித்தார்.

உள்ளவை இல்லா தவைகளையெல்லாம் உருவாக்கிக் காண்பிக்கக்கூடிய நவீன படப்பிடிப்புக் கருவிகளைக் கொண்ட சினிமாக்கலையையே நாடகக் கலை தோற்கடித்து வருகிறதென்பதையும் நடிகர் மனேகர் கூறினர்.

நேற்று கொழும்பு வந்து சேர்ந்த நடிகர் மனேகர் இலங்கை பத்திரிகைக்கு நிருபர்களை “கோல்பேஸ் ஹோட்டலில்” சந்தித்துப் பேசினர். அப்போது சினிமாக் கலையைப் பற்றியும் ஓரளவுக்கு இந்திய அரசியல் பற்றியும் பேசினர்.

உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தவிர்ந்த எந்தப் பிரச்சினைகளைப்பற்றிய கேள்விகளுக்கும் பதில் கொடுக்கப்படும் என்று ஆரம்பித்த மனேகர் தமிழ் நாட்டு நடிகர்களில் நம்பியார், ஜெமினி போன்ற நடிகர்கள் தமக்குப் பிடித்தவர்கள் என்றதும் ஒரு நிருபர் “நடிகைகளில்?” என்ற கேள்வியைப் போட்டார். அதற்கு மனேகர் பதிலளிக்கவில்லை!

இனி மனேகர் கூறியதாவது:-

### பாஸ்போர்ட் தொல்லை அதிகம்

இப்போது “பாஸ்போர்ட்” தொல்லை அதிகரித்திருக்கிறது. இதனல் நாடகக் கோஷ்டிகளுடன் இங்கு வந்து நாடகங்களை நடித்துக் காண்பிக்க முடியாமலிருக்கிறது. உங்கள் அரசாங்கம் அனுமதித்தால் இங்கு வந்து நாடகங்களை நடித்துக் காண்பிப்போம்.

கே: தமிழ்ப் படங்களில் முத்தமிடும் காட்சிகளை ஆதரிக்கிறீர்களா?

மனேகர்: எங்கள் தமிழ் கலாசாரத்துக்கு முரணான செயல் அது. ஐரோப்பியர்கள் அதைச் செய்யட்டும். ஆசிய கலாசாரத்தில் திளைத்த நாடுகள் எதிலும் சினிமாவில் முத்தமிடும் காட்சிகள் வருவதில்லை. உதாரணமாக பாகிஸ்தான், சீன ஆகியவைகளை எடுத்துக் கொள்வோம். அந் நாட்டு நடிகர்கள் படங்களில் முத்தமிடுவதில்லை. எமது கலாச்சாரத்துக்கு புறம்பானவைகளை ஏன் நாம் செய்யவேண்டும்.

கே: படம் பிடிக்கும் வேலைகளை நீங்கள் மேற்கொள்ளவிருக்கிறீர்களா? அதாவது டைரக்டராக...?

மனேகர்: படப்பிடிப்பை ஆரம்பிக்க வயது முக்கியமல்ல. நடிப்புக்குத்தான் வயது முக்கியம். வயது போய் விட்டால் நடிப்புக் குறைந்துவிடும். முதலில் நடிப்பு பின்னர் படப்பிடிப்பு என்ருக வேண்டும்.

இன்று நடிப்புக்கலை வெகுவாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. இந்த முன்னேற்றத்தை கைவிட்டுவிடக்கூடாது.

### கிருஷ்ணனுக்கு சிலை பேச்சளவில்!

கே: நகைச்சுவை மன்னர் கிருஷ்ணனுக்கு சிலை அமைப்பதென்ற முடிவு என்னவாயிற்று?

மனேகர்: மேடைப் பேச்சுடன் மாத்திரம் நிற்கிறது போல் இருக்கிறது. செயலில் இதைக் காணவில்லை. நான் கிருஷ்ணனின் மாணவனக (சிஷ்யன்) இருந்ததில்லை, அப்படியிருந்தவர்கள்தான் ஆரம்பத்தில் சிரத்தை எடுக்க வேண்டும். அதற்கு நான் எனது ஒத்தாசையைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

கே: இந்தியப் படங்களில் தென்னிந்திய நடிகைகள் சேர்ந்துக் கொள்ளப்படுவதன் காரணம் என்ன?

மனேகர்: இந்திப்பட உலகில் அதிகமான அழகிகள் இல்லாதது காரணமாகவிருக்கலாம். இந்திப் படப்பிடிப்பாளர்கள் தென் இந்திய நடிகைகளை தமது படங்களில் நடிக்கச்சேர்த்துக்கொள்வது தென் இந்தியப் பெண்கள் அழகானவர்களாக இருப்பதனல்த்தான் இந்தி நடிகைகளிடத்தில் போட்டி மனப்பான்மையும் இருக்கிறது.

### கொஞ்சும் சலங்கையில் கர்நாடக சங்கீதம்

கே: இந்தி மெட்டுக்களை தமிழ் படங்களில் சேர்த்துக் கொள்வதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மனேகர்: தமிழ் கலாச்சாரத்தின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்ட கர்நாடக சங்கீதத்தால்தான் முடியும். கலப்பு சங்கீதத்தாலல்ல. உதாரணமாக “கொஞ்சும் சலங்கை” படத்தில் கர்நாடக சங்கீதமே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கர்நாடக சங்கீதத்தை மாத்திரமல்ல நாதஸ்வர இசையையும் கொஞ்சும் சலங்கைகளில் ரசிக்கலாம்.

கே: நீங்கள் எந்த அரசியல் கட்சியில் அங்கம் வகிக்கிறீர்கள்?

மனேகர்: நான் இப்போது எந்தக் கட்சியிலுமில்லை. காந்திஜி இறந்த பின்னர் காங்கிரஸ்கட்சியிலிருந்து விலகிவிட்டேன். காங்கிரஸ்காரர்கள் பேச்சொன்று செயலொன்ருக விருக்கிறது.

### நல்ல கட்சியை எதிர் பார்க்கிறேன்

கே: அரசியலை முற்ருக மறந்து விடும் நோக்கம் உண்டா?

மனேகர்: இல்லை. நல்ல கட்சி ஒன்று உதயமாகுவதை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அப்படி வரும் பட்சத்தில் அக் கட்சி அங்கத்தவனுவேன்.

கே: எதிர் வரும் இந்திய பொதுத் தேர்தலைப்பற்றி என்ன நினைகிறீர்கள்?

மனேகர்: காங்கிரஸ் கட்சி தான் ஆட்சிக்கு வரும், தற்பொழுது அதன் மதிப்பு அதிகரித்துள்ளது.

கே: காரணம் என்ன?

மனேகர்: இந்தியாவிலுள்ள எதிர் கட்சிகளுக்கிடையில்ஏற்பட்டிருக்கும் பிளவுகளை முக்கியமானகாரணமாக கூறலாம். சென்னை அரசியலில்உள்ள எதிர்க் கட்சிகள் சமீபத்தில் கோஷ்டி வேறுபாடுகளினல் பலமிழந்து விட்டன. இதே சமயத்தில் முதன் மந்திரி காமராஜருடைய மதிப்பு அதிகரித்திருக்கிறது. அவருடைய ஸ்திரமான போக்கு இதற்கு காரணமாகவிருக்கலாம்.

கே: கொம்யூனிஸ்ட் நாடுகளில் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதா?

மனேகர்: கலை வளர்ச்சிக்கு கம்யூனிஸ்ட் நாடுகள் நல்ல உதவியும், ஒத்தாசையும் கொடுக்கின்றன. பல துறைகளிலும் மான்யம் வழங்கப்படுகிறது. கலை வளர்ச்சி சங்கங்களுக்கு கொடுக்கப்படும் மான்யத்தைக் கொண்டு சங்கங்கள் போட்டி போட்டுக் கொண்டு பிரபல்யமடைந்து விடுகின்றன. வருமானம் அதிகமாக உள்ள சங்கங்கள் அரசாங்கம் கொடுத்துதவிய மான்யத்தைச் சிறிது சிறிதாக திருப்பிக் கொடுத்து விடுகின்றன.

கே: உங்கள் நாட்டில் என்ன நிலையோ?

மனேகர்: ஓ! அதுவா? தமிழ் நாடு அரசாங்கம் கலை வளர்ச்சிக்கு எதிராகவிருக்கிறது. எந்தத் துறையிலும் உதவி செய்வதில்லை. வரியாகவே அறவிட்டுவிடுகிறது. இப்படியான வரிப்பளு வேறு எங்குமில்லை.

ஒரு நிருபர்: எமது நாட்டிலும் வரிக் குறைவில்லை!

மனேகர்: உங்கள் நாட்டை எமது நாடு மிஞ்சிவிடும்!

கே: படத்தணிகை எப்படி?

மனேகர்: இந்திய படத் தணிக்கைசபை கடுமையான நடவடிக்கைகளைக் கையாளுகிறது.

கே:- திரைப்படத் தொழிலை தேசிய மயமாக்கினல்?

மனேகர்:- தேசியமயமாக்கினல் தரம் குறைந்துவிடும். தொழில் மங்கிவிடும். அரசாங்கம் எடுக்கும் தொழில்கள் எல்லாம் சரிவருவதில்லை.

குறிப்பாக ரெலிபோன் சேர்வீஸ் இந்த வேலைதான். படப்பிடிப்புத் தொழிலுக்கும் வரும்.

கே: பிறநாடுகளுக்கு விஜயம் செய்யும் நோக்கம் உண்டா?

மனேகர்: ஆம் 1965 ம் ஆண்டில் உலக சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிப்பதற்கு திட்டம்.

கே: உங்கள் இலங்கை நேயர்களைப்பற்றி?

மனேகர்: எனக்கு இலங்கையில் தான் அதிகமான நேயர்கள் இருக்கிருர்கள். சொல்லப்போனல் இந்தியாவின் எந்தப் பாகத்தையும் விட இலங்கையில்தான் என் நேயர்கள் அதிகம்: அவர்களுக்கு எனது நன்றி.



# மங்கையர் உலகம்



## கவிஞன் கண்ட பெண்

— அருந்ததி —

சேற்றிலே முளைத்த செந்தாமரைக்கு ஒரு புதிய ஒளியுண்டு. அத்தகைய புதிய ஒளி அவளுக்கு உண்டு. அவள் துன்பம் நீக்க வந்தவள். சுதந்திரப் பேரிகை கொட்டி வந்தவள். அவளது இனம் செய்த தவப்பயன் அவளே தான். அவள் அன்பின் சின்னம். அழகுத் தெய்வம். அறிவுச் செல்வம். தன்னுடைய அழகு மிக்க வாயினால் சில சொற்கள் கூறினாள். "மாதர்க்குண்டு சுதந்திரம்" இதுவே அவள் கூறிய மொழி.

அவள் சொற்கள் இனிய இசையாக இருந்தன. நாரதர் வீணையோ கண்ணனின் வேய்ங்குழலோ என்று ஐயுறும் வண்ணம் அவள் இனிய மொழிகள், இசைத்துக் கொண்டிருந்தன. அவ்வளவுமட்டுமல்ல. அவள் எண்ணத்தில் அற்புத எண்ணங்கள் உதித்தன. அவ்வெண்ணங்களின்படி வாழ முற்பட்டாள். பிறரையும் அவ்வாறு வாழ வேண்டினாள். தன் எண்ணக் கருத்துக்களை விநயமாகக் கூறினாள். அவள்தான் பாரதி கண்ட "புதுமைப் பெண்". பாரதி வேண்டிய கற்பனைப் பெண். அறிவு படைத்த மனித உயிர்களை அடிமையாக்குபவனைப் பித்தனென்றும் மனிதனுக்கு மனிதன் அடிமைத் தொண்டு செய்ய வேண்டியதில்லையெனவும் ஒழுக்க நெறியில் உயர்வடைந்து மனிதன் தேவனாக மாற வேண்டுமெனவும் அதற்கு அடிமைத்தனத்தைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டுமெனவும் அவள் கூறுகிறாள்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டால் இவ்வுலகம் அறிவில் சிறக்குமென்பதும் நல்ல தருமத்தைப் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்பதும் அவள் கருத்து.

"நாணும் அச்சமும் நாய்கட்கு
வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின்
குணங்களாம்"

என்றாள். அறிவையும் சுதந்திரத்தையும் வீரத்துடன் வேண்டியுள்ளாள் அந்தப்பெண்.

நிலத்தின் தன்மை பயிர்க்கு உண்டு. அதுபோல நல்ல மக்களைப் பெறுவது நல்ல தாய்க்கு இலகுவான விஷயமென்பது அவள் கூற்று. மாதர் குலத்துக்கு கற்பு இயல்பாக உண்டென்றாள். ஆகையால் கட்டுப்பாடுகள் விதித்து அத்தர்மத்தைக் காக்க வேண்டியதில்லை என்றாள்.

நிமிர்ந்தநன்னடைநேர்கொண்ட
பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத
நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்
இருப்பதால்
செம்மை மாதர்திறம்புவதில்லை

என்றாள்.

அறியாமையாகிய இருளில் இருந்து அவல நிலையடைந்து கவலையில்லாது வாழும் தீய வழக்கத்தை உதறித் தள்ளுதல் பெண்ணறமென்றாள். சீருடை நாடுகளுக்குச் சென்றும் புதுமைகளைக் கொண்டு வந்தும் உலக வாழ்க்கையின் நுட்பங்களைத் தெரிந்தும் பற்பல நூல்களைக் கற்றும் வீரத்துடன் பெண்கள் வாழ வேண்டும் என்றாள்.

சாத்திரங்கள் பல கற்போம் என்றாள். சௌகரியங்கள் பல செய்வோம் என்றாள். பழைய மூடக் கொள்கைகளைத் தவிர்ப்போம் என்றாள். கடவுள் விரும்பும் முறையில் மனிதன் வாழ வழி வகுப்போம் என்றாள்- அந்த அற்புதப் பெண்.

இவள் கூறியவை கலியுகத்துக்குப் புதுமையுடையனவாகத் தோற்றலாம். ஆனால் வேதவிதிகளுக்கு இவைமுரண்படாது. சாதி செய்த தவப் பயனாகக் கிடைத்தவள் இத்தீரப்பெண். பாரதி விரும்பிய புதுமைப்பெண் இவள். பெண்களுக்கான இலட்சியங்களைப் பெண்ணின் வாயினாலேயே எடுத்துக் கூறியுள்ளான் பாரதி.

## வீரமும் கற்றல் வேண்டும்

ஒழுக்கமும், கல்வியும் வாய்ந்த கன்னிகைகள், குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் கடமையை மேற்கொள்ளவேண்டும். இத்தகையவர்களால் தான் பக்தியும் கல்வியும் வாய்ந்த பெண்களிடையே கல்வி பரப்புவது சாத்தியமாகும். தையல், சமையல், சுகாதாரம், குழந்தைகளைப் பேணல் முதலியனவும் சொல்லித்தரப்படல் வேண்டும். தெய்வ ஆராதனை, ஜபம், தியானம் முதலியன அவர்கள் கல்வி முறையில் முக்கியமான அம்சங்களாக இருக்கவேண்டும். இவற்றுடன் வீர உணர்ச்சியையும் அவர்களிடம் வளர்ப்பது அவசியம். பிறர் வந்து துன்புறுத்தினால் அவர்களை எதிர்த்துப் போராடத்தக்க வன்மையும் அவர்கள் பெறவேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

## ஆசிரியர் தட்டுப்பாடு

புசல்லாவை, புதன்

புசல்லாவையில் உள்ள புனித திருத்துவக் கல்லூரியில் இப்போது ஆசிரியர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதை நிவர்த்தி செய்யவேண்டுமெனக் கோரி மேற்படி கல்லூரி பெற்றோர். ஆசிரியர்சங்கம் கல்வி இலாகாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மெலியாரை வலியார் தாக்கினால்..?

— கனகம் —

'இது என்ன. இதை மனுஷன் எப்படிச் சாப்பிடுகிறது'.

'ஏன் நல்லாக இல்லையா. கொஞ்சம் குழைத்துச் சாப்பிடுங்கள் நல்லாயிருக்கும்'.

'நீ சமைத்த சமையலை சாப்பிடுவதைவிட ஒரு துளி விஷத்தைச் சாப்பிடுவது நல்லது.'

'ஏன் அப்படிச் சொல்றீங்கள். எங்கேனும் சாப்பிட்டு விட்டு வத்திட்டீங்கள் போலிருக்கு. அதுதான் பசியில்லையாக்கும்'.

பொன்னனுக்கு அகப்பையால் சொதியை வார்த்துக் கொண்டே காரணம் கூறினாள் பார்வதி.

'காரணம் கூறுகிறாயா காரணம்!'

மது வெறியால் விறைப்பேறியகை பார்வதியின் சோர்ந்த முகத்தைப் பதம் பார்த்தது.

'ஏன் இப்பிடி அடித்தீங்கள். நான் இப்ப என்னத்தைச் சொல்லீட்டேன். கறிக்கு உப்பு போதாதா? போட்டுத் தாறேன்'.

பொறுமையின் உருவம்பேசியது.

'நீ போட வேண்டாம். நான் போடுறேன்.'

அடியின் வேகத்தினால் பார்வதியின் கோதி முடித்த தலைமயிர் குலைந்தது.

வலியிழந்த ஒருத்தியை தாக்குகிறோமே, அவள் செய்த குற்றம் தான் என்ன? இந்தக் கேள்வி பொன்னனின் இதயத்தில் எழவில்லை. தன் வல்லமைக்கு எதிராக சவால் விட முடியாது நிற்கிறாள் என்ற பெருமிதத்தில் அவளை வெதும்பச் செய்தான்.

'கடவுளே!' வலியின் வேகத்தினால் முனகினாள் பார்வதி.

'கடவுளா? அவரை ஏன் கூப்பிடுகிறாய். ஓடியந்து என்னையடிப்பாரெண்டு நினைக்கிறாயா?' உம்...? உடம்பு அதிரக் கோபத்தோடு சிரித்தான் பொன்னன்.

'பொறு வருகிறேன்' என்று விறுவிறுஎன எழுந்து வாசலில் நின்ற சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் பொன்னன்.

மனைவியை அடித்ததில் அவனுக்கு தனிப் பெருமை. ஒரு மெல்லிய உடலை நையப்புடைத்தது பற்றி ஒருவித பூரிப்பு. இன்னும் சிறிது மது அருந்தினால் வீரம் அதிகரிக்கலாம் என்ற அசையாத நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.

எங்கிருந்து வீட்டுக்கு நேரே வந்தானோ அங்கேயே சென்றான்.

வயிற்றை நிரப்பிக் கொண்டு வீடு நோக்கினான்.

'பார்வதி இண்டைக்குத் தான் நீ பிறந்த நாள்' பல்லைக் கடித்துக்கொண்டே தனக்குள் கூறிக்கொண்டான்.

சைக்கிள் அவன் கையில் சதிராடியது விரைவில் வீடு செல்ல எண்ணிய அவன் மனதுக்கு ஈடுகொடுக்க முடியாது கால்கள் தடுமாறின. சிறிது தூரம் சென்றிருப்பான், அதற்குள்...

'ஐயோ' அவலக்குரலொன்று அவ்வளவு தான். சைக்கிள் ஒரு பக்கமாகவும் பொன்னன் மறு பக்கமாகவும்...

பொன்னனின் சைக்கிள் தட்டி விழுந்து கிடந்த சிறுவன் மீண்டும்'ஐயோ அம்மா' என்று அலறினான்.

கூட்டம் கூடிவிட்டது

மீசையைத் தட்டி விட்டுக் கொண்டே முன் வந்தான் ஒரு முரடன்.

'டேய்! கடவுள் கண்ணைத் தந்தா பார்த்து ஓடவேணும். பாதை தெரியாதவனுக்கு சைக்கிளோட்ட மெதுக்கு'.

'அதற்கு மேல் அவன் பேசவில்லை'.

'மளார், மளார்' தைப்பொங்கல் தினத்தில் கேட்கும் பட்டாஸ் வெடிகளின்சப்தம் தான் கேட்டது. அடியின் வேகம் யார் இதயத்தையும் தொட்டிருக்கும்.

"பார்வதி...பார்வதி..பார்...! வலி பொறுக்க முடியாது வல்லமை முழுவதையும் சேர்த்து உரத்துக் கூவினான் பொன்னன்.

கோபித்துக்கொண்டு போன கணவனை வாசலில் எதிர் பார்த்துக் கொண்டிருந்த பார்வதியின் காதில் மெதுவாகக் கேட்டது அக்குரல்.

ஓடி வந்தார்கள். 'ஐயோ விடுங்கோ, ஐயா விடுங்கோ அவரை அடிக்க வேண்டாம்.'

கெஞ்சினாள் பார்வதி.

'இவன் உன்கணவனா. உன் முகத்துக்காக விடுகிறேனம்மா இல்லாவிட்டால் இவனைக் கொண்டிருப்பேன். பாரம்மா இந்தச் சின்னப்பிள்ளையைத் தட்டீட்டான். இவனுக்கு கண்ணிருக்கா?"

'அம்மா, அம்மா' சிறுவன் பொன்னியின் அருகில் சென்றான்.

'அவன் உங்கள் மகனா?' என்றுஅந்தமுரடன்கேட்டான்.


'ஆம். அவன் என் மகன்' சிறிது பதட்டத்துடன் பதிலளித்தாள் பார்வதி.

'சரிதான், தகப்பன்தான் பிள்ளையைத் தட்டியிருக்கிறான்' கேலிச் சிரிப்புச் சிரித்தான் முரடன்.

பொன்னனுக்கு மதி தெளிந்தது.

'பார்வதி, பார்வதி' அவளின் முகத்தை நேரே பார்க்க முடியாமல் தலை குனிந்தபடி விக்கி விக்கி அழுதான் பொன்னன்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனிய.

இந்திய தேயிலையின் செல்வாக்கை லண்டனில் பரப்புவதற்காக லண்டனில் நடமாடும் தேயிலை நிலையத்தை நடத்தும் செல்வி சுபத்திரா ஸிஸ்டர் தமது நடமாடும் தேயிலை நிலையத்துக்கருகில் நிற்கிறார். பம்பாய் தேயிலை நிலையத்தின் அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் லண்டனில் 8 வாரகாலம் உல்லாசப்பிரயாணிகள் தங்குமிடங்களுக்குத் தமது ஸ்தாபனத்துடன் சென்று இதுசம்பந்தமாகப் பிரசாரஞ் செய்வார்.

## இரண்டு கதிரையில் மூன்று மாணவர்!

திருக்கோணமலை, வியாழன் சுமார் 250 மாணவர்களுக்கு அதிகமாக கல்வி பயிலும் அபயபுரா கீழ்ப்பிரிவு பாடசாலைக்கு, கல்வி இலாகா இதுவரை எவ்விதமான தளபாடங்களும் வழங்கவில்லை எனத் தெரியவருகிறது.

இந்தப் பாடசாலை இரண்டு கட்டடங்களில் இயங்குகின்றது. 8 ஆசிரியர்கள் படிப்பிக்கின்றனர். அத்துடன் பாடசாலையிலுள்ள பணியாளர்களுக்கு மொத்தம் ஒரு கதிரையும், ஒரு மேசையும் மட்டுமே போடப்பட்டிருக்கின்றது!

இப்பாடசாலையில் படிப்பிக்கும் ஒரு ஆசிரியர், தமது பாவனைக்காக அருகிலுள்ள ஒரு வீட்டிலிருந்து கதிரையொன்றை கொண்டுவந்திருக்கிறார். மாணவர்கள் திருக்கோணமலை அரசினர் கீழ்ப்பிரிவு பாடசாலையின் கதிரை மேசைகளை உபயோகிக்கின்றனர். இக் காரணத்தினல் மூன்று மாணவர்கள் இரண்டு கதிரைகளில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது!


# கட்டிட சாமான்கள்

கை மார்க் சிமிந்தி
அசானே ,,
டால்மியா ,,
எச் அயண், ஆங்கிலயண்
பிளாட்டயண், ட அயண்
கல்வனைஸ் கூரைத் தகடுகள்
அலுமினியம் ,, ,,
அஸ்பெஸ்டாஸ் ,, ,,
ராணி மார்க் கூரை ஓடுகள்
மஹாராணி மார்க் கூரை ஓடுகள்
இரும்புத் தகடுகள்
கல்வனைஸ் பைப்

மிகவும் சகாயமான விலைகளில் கிடைக்குமிடம்

**செட்டிநாட்**
**கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்**
116, 118, கெய்சர் வீதி,
கொழும்பு.


## பல்கலைக்கழகப் பரீட்சை திறமையாளருக்குப் பரிசு

கண்டி, வியாழன்

இலங்கைப் பல்கலைக்கழகம் 1961-ம் ஆண்டு ஏப்ரலில் நடாத்திய கலைப்பகுதி விஞ்ஞானப்பகுதிகளின் இறுதிப்பரீட்சைகளில் திறைமையாகச் சித்தி எய்தியவர்களுக்குக் கீழ் வரும் உபகாரச் சம்பளங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

**கலைப்பகுதி**

கீழைத்தேச பாடங்களில் உபகாரச்சம்பளம்: எஸ். தில்லைநாதன், பி. பூலோகசிங்கம். கலைப்பகுதிப் பாடங்களில் உபகாரச்சம்பளம் பெறுவோர்: எம். டபிள்யு. றொபேர்ட்ஸ், எஸ். எம். எல். மரிக்கார்.

சி. ஈ. ஜயநாயகா பரிசு (சிங்களப்பாடத்தில் விசேஷ சித்தி எய்தியவர்களுக்கு): டி. எம். ஜே. பி. திசநாயகா. எப். எச். எம். கோர்பேர்ட் பரிசு (இலங்கைச் சரித்திரப்பாடத்தில் விசேஷசித்தி எய்தியவருக்கு):- எம். டபிள்யு. றொபேர்ட்ஸ். மேபல் ஜயசூரிய பரிசு (சரித்திரபாடத்தில் விசேஷசித்தி எய்தியவருக்கு):- எம். டபிள்யு. றொபேர்ட்ஸ். ஆறுமுகநாவலர் ஞாபகபரிசு (தமிழ்பாடத்தில் விசேஷசித்தி எய்தியவருக்கு):- எஸ். தில்லைநாதன்.

**விஞ்ஞானப்பகுதி**

குமாரசாமி பரிசு:- எஸ். கணேசன். உபகாரச் சம்பளம் ஜி. சண்முகம், வி. கே. சமரநாயகா.

---

## எதற்கும் அரசாங்கத்தை எதிர் பார்க்கலாகாது

தெஹிவளை, வியாழன்

போதனைகளைக் குறைத்துச் சாதனைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென எக்ஸத் லங்கா ரசிக சங்கமயாவின் வருடாந்த விழாவில் வண. பிதா. ஜயக்கொடி பேசும்போது கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கலாச்சாரத் துறைகளில் ஈடுபட்டவுடன், சாதி, சமயம், சமுதாயம் என்ற கேள்விகள் எழமாட்டாதென்றார்.

கலாச்சார இலாகாவின் டைரக்டர் திரு. எம். ஜே. பெரேரா பின்வருமாறு குறிப்பிட்டார்:

“ சகல தேவைகளுக்கும் அரசாங்கத்தையே மக்கள் எதிர்பார்த்து இருக்கக்கூடாது. பழங்கால சிங்கள கலாச்சாரத்தை மீண்டும் கொண்டுவர மக்கள் பாடுபடவேண்டும்.

# உள்நாட்டுப்பொருளாதாரத்தில் ஒரு புதிய அத்தியாயம்

## மக்கள் வங்கிக்கு மந்திரி பாராட்டு

ஹொறணை, வியாழன்

‘சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தின் சோஷலிசக் கொள்கையும் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையும் ஒரேமாதிரியாக இருப்பதால் சிறிமாவோ அரசாங்கத்தை ஒரு கூட்டுறவு அரசாங்கம்’ என்று கூறலாம் என உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு டி. பி. இலங்கரத்ன மத்துகம ஆனந்த சாஸ்திராலய கல்லூரியில் நடைபெற்ற கூட்டுறவுஸ்தாபன பிரதிநிதிகள் மாநாட்டில் பேசுகையில் கூறினர்.

அவர்மேலும் கூறியதாவது:-

அதிகமான கூட்டுறவு ஸ்தாபனங்கள் நற்பெயர் எடுக்கவில்லை. இவைகள் சிறிது காலத்துக்குள் தொடர்ந்து இயக்கமுடியாத நிலையை அடைந்தன. காரணம், இங்கு வேலைசெய்யும் ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.

இவர்களின் நலன் பற்றிக் கவனிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்படல் வேண்டும்.

நல்ல சம்பளமும் பென்ஷன் வசதியும் இந்த ஊழியருக்கு அளிக்கப்படல் வேண்டும்.

மக்கள் வங்கியை ஆரம்பித்ததிலிருந்து உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது.

குடிசைக் கைத்தொழிலை விருத்திசெய்யவும், வியாபாரத்தைப் பெருக்கவும் குறைந்த வட்டியுடன் கடன்பெற இன்று வசதியளிக்கப்பட்டுள்ளது.

எண்ணையையும், கருவாட்டு விநியோகத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தத் தொடங்கிவிட்டால் ஏகாதிபத்தியக்காரர்களின் பொய்ப் பிரசாரமும் குட்டும் வெளிப்பட்டுவிடும்.

கூட்டுறவு இயக்கம், வெளிநாட்டு வர்த்தகர்களிடமிருந்து வியாபாரத்தை நம்மக்களின் கைக்கு மாற்றியது. வெளிநாட்டு வர்த்தகர்களின் மீது விதிக்கப்பட்ட புதுவரிகள் எல்லாம் வெளிநாட்டவர்களுக்கு இலங்கையிலிருந்த பற்றைக் குறைத்துள்ளது.

வெளிநாட்டவர்களில் சிலரே இங்கு நுழைய முயற்சி செய்கிறார்கள். வெளிநாட்டவர் பலர் இலங்கையை இலங்கை மக்களிடம் விட்டுவிட்டு கப்பல் ஏறுவது மிகவும் மகிழ்ச்சியானதொரு காரியம்.

காபந்து அரசாங்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலையையும் நீங்கள் உணர்வீர்கள்.

இங்கு 31 சட்டவிரோதக் குடியேற்றக் காரர்களுக்கு கௌரவப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது என மந்திரி இறுதியில் குற்றம் சுமத்தினர்.

---

## நச்சுத்திராவகம் குடித்து மாண்டார்

பிபிலை, புதன்

பதினறு வயதுள்ள டி. பபி என்ற விவாகமான பெண், தனது கணவரின் மீது கொண்ட சந்தேகம் காரணமாகத் தமது தாயாரின் வீட்டிலேயே நச்சுத்திராவகத்தைக் குடித்து மரணமானர்.

நச்சுத் திராவகத்தை உட்கொண்ட அவர், சிறிதளவை வெளியிலும் கொட்டிவிட்டார். அந்த நஞ்சுத் திராவகத்தை நக்கிய பபியின் வீட்டு நாயும் அந்த இடத்திலேயே மரணமானது!

இது பற்றி விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரியிடம் இறந்தவரின் தந்தையான திரு. டி. சிங்கோ அப்பு தெரிவிக்கையில், தமது மகளை அண்மையில் டி. ஜேமிஸ் என்பவர் திருமணம் செய்தார் என்றும், அவர்கள் இருவரும் சிறிது காலத்துக்கு ஒன்ருக வாழ்ந்தார்கள் என்றும் கூறினர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 29-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை 7-45 கே. செல்வக்குமாரசாமி-பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-15 எஸ். சிவசாமி - நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 ஞானஅஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 ஐ. சிவ அன்பு - கதாப்பிரசங்கம், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எஸ். எம். வல்லவரங்கம்பிள்ளை - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 எச். எஸ். மத்வாச்சார் - கோட்டு வாத்தியம்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 9-15 பலகணி, 9-30 மெல்லிசைத் தொகுப்பு, 9-45 இசைமாலை.

---

## கதிரியக்க வீழ்ச்சியை தடுக்க

### அமெரிக்க விஞ்ஞானி ஆராய்ச்சி

கொலொராடோ, செப்.27

மனித சமுதாயத்தை கதிரியக்க வீழ்ச்சியின் அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்கானவழி வகைகளைக் கண்டு பிடிப்பதில் அமெரிக்க விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஜோர்ஜியா பல்கலைக் கழக தாவரவியல் விஞ்ஞானியான திரு. ஈ. பி. ஓடம், சில ஜெந்துக்கள் தொடர்ந்து மரங்களிலுள்ள இலைகளை சாப்பிடுவதினல் கதிரியக்கத்தை எதிர்க்கக்கூடிய வலுப்பெறுகின்றன எனத்தெரிவித்தார்.

சோவியத் யூனியன் மீண்டும் அணு ஆயுத பரிசோதனைகளை மேற்கொண்டதினல் மனிதன் உட்கொள்ளும் உணவிலும், பாலிலும் உள்ள கதிரியக்கத்தின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஜெந்துக்கள் மரங்களிலுள்ள எந்தப் பகுதியை சாப்பிடுவதினல் இத்தகைய கதிரியக்க எதிர்ப்பு சக்தியை பெறுகின்றன என்பதை இதுவரை தம்மால் நிர்ணயிக்க முடியவில்லையென திரு. ஓடம் தெரிவித்தார்.

இத் துறையில் தாம் தீவிரமாகத் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.


# மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM · TRADE MARK 18502

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிளுடன்
மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM · REGD. TRADE MARK No 18255 · A. M. BUHARI, COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# பாடசாலைகளில் மும்மொழி பாடபோதனை

## நாளை நடைபெறும் தலைமை ஆசிரியர்கள்கூட்டம்விவாதிக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைத் தலைமை ஆசிரியர்கள் மகாநாடு நாளை வட்டுக்கோட்டையாழ்ப்பாணக் கல்லூரியில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது.

இம்மகாநாட்டுக்கு இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொள்வார்கள். பிரதம விருந்தினராக வண. எஸ். கே. பங்கர் அழைக்கப்பட்டுள்ளார். தனிப்பட்ட பாடசாலைகள், வித்தியாதிபதியின்கீழ் இயங்கும் பாடசாலைகளில் உள்ள விசேஷ பிரச்சினைகள் பற்றிய விவாதம் மகாநாட்டில் இடம் பெறும். முதல் விவாதத்துக்கு வண. அத்தனேஷியஸும், இரண்டாவது விவாதத்துக்கு திரு. ஈ. ஏ. விஜயசூரியாவும் தலைமை தாங்குவார்கள்.

கீழ்வரும் தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கின்றன:

பொதுத் தராதரப் பரீட்சைப் பாடத் திட்டத்தில் எதுவித மாற்றமும் செய்யக் கூடாது. அப்படிச் செய்வதென்ருலும் தலைமை ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே செய்தல் வேண்டும். பயிற்றப்படும் மொழி சம்பந்தமாக கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்காக ஒரு கூட்டு ஆலோசனைக் கமிட்டி ஏற்படுத்தி வருடத்தில் ஒரு முறையாவது இக்கமிட்டி கூடுவதற்கான முக்கிய ஒழுங்கு செய்யப்படவேண்டும். தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்காக அதிக பாடசாலைகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கல்வி போதிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பயில முடியாதிருக்கும் மாணவர்களுக்கு வசதி செய்யும் முகமாக லண்டன் பல்கலைக் கழக உயர்தரப் பாடங்களையும் பட்டப் பரீட்சைக்கான பாடங்களையும் பயில்வதற்கு அனுமதியளிக்கப்படல் வேண்டும்.

உயர்ந்த நிலையில் ஒழுங்கு முறையைக் கைக்கொள்வதற்காக தலைமை ஆசிரியர்களைக் கலந்தாலோசித்து ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். ஐந்து வருடத்துக்குக் குறைவில்லாத ஆசிரிய அனுபவம் பெற்றவர்களையே பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும்.

---

## பிண்ணுக்கு ஏற்றுமதி வரி

### அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு, வியாழன்

உணவு வர்த்தகம், காணி விவசாயம், நிதி ஆகிய மூன்று அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி பிண்ணுக்கின் மீது விதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி வரியை ரத்துச் செய்யவேண்டுமென சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை பற்றி ஆலோசனை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் ரத்துச்செய்தாலோ வரியைக் குறைத்தாலோ அது உள்ளூர் பால்பண்ணைகளையும் பொருளாதாரத்தையும் பாதி குமா என்பது பற்றியும் கமிட்டி ஆராயும்.

ஒருதொன் பிண்ணுக்கின் ஏற்றுமதிக்கான வரி ரூ. 200 என்றும் இந்தக் கூடுதலான வரி காரணமாக மேலதிகமாக இங்கு தயாரிக்கப்படும் பிண்ணுக்கை ஏற்றுமதி செய்ய முடியாதிருக்கிறதென இலங்கை தெங்குச் சபையினரும் தாழ்ந்த பிரதேச உற்பத்திப் பொருள்கள் சங்கமும் தொடர்ந்து அரசாங்கத்திடம் புகார் செய்துள்ளனர்.


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல்2-30

ஜெமினி கணேசன், சரோஜாதேவி
நடித்த

இல்லறமே நல்லறம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## "ஆலயங்களில் விவாகம் நடத்தலாம்"

### ஸ்ரீ குமாரசாமிகுருக்கள் அறிக்கை

கீரிமலை, வியாழன்

"விவாகச்சடங்குகள் ஆலயங்களில் நடாத்தப்படாது என்பதற்கு ஆகமப்பிரமாணங்கள் கிடையாது. நெடுங்காலமாக இந்திய, மலாயா, இலங்கை ஆகிய இடங்களில் இவை நிகழ்ந்து வருகின்றன. விவாகச் சடங்குகள் ஆலயங்களில் நடைபெறுவதால் ஆலயத்திற்கு ஏதேனும் அனுச்சாரம் உண்டாகப்போவதில்லை.

'திருமணம்' என்னும் சொல் கடவுளுடைய மணத்துக்கே உரியது. மனிஷர்களுக்கு நடாத்தப்படும் மணம் விவாக சோபனம் என வழங்கியிருக்கிருர்கள். ஆகையால் கோவில்களில் விவாகம் நடைபெறலாம் என்பதே எனது முற்று. கீரிமலை கா. சபாபதிக்குருக்களவர்களும் நாவலரும் ஒரே காலத்தவர்கள். சபாபதிக்குருக்கள் காலத்தில் சிவன்கோவிலில் விவாகச்சடங்குகள் நடைபெற்றிருக்கின்றன." இவ்வாறு அகில இலங்கைக் குருக்கள் மார்சபைப்பிரதமபோஷகரான அச்சுவேலி ச. குமாரசாமிக் குருக்கள் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கிருர்.

8-10-61 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கீரிமலைச் சிவன்கோவில் முன்றலில் "ஆலயங்களில் விவாகச் சடங்குகள் நடாத்தலாம்" என்ற விஷயம் ஆதாரங்களோடு நிரூபிக்க கூட்டம் ஏற்பாடாகி வருகிறது.

---

## துறைமுகப் பகுதியில் பொலிஸார் கண்காணிப்பு

கொழும்பு, வியாழன்

கொழும்புத் துறைமுகத்துக்கு கப்பல்கள் வரும் நாட்களில் சாதாரண உடையணிந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொழும்பு கோட்டைப் பகுதியைக் கண்காணித்து வருவார்கள்.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் பணத்தையும் பொருள்களையும் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்துவிடுவதாகப் பொலிஸாருக்குப் புகார் கிடைத்ததன் பேரிலேயே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஒரு கடற்படைக் கப்பலில் வந்த கப்பல் படையினர் சிலர் கொழும்பு நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு கப்பலுக்குத் திரும்பியபோது பணம், கமரா, இன்னும் பல பொருள்களை இழந்துவிட்டதை உணர்ந்தார்களாம்.

---

## பாரதி கலாமன்றம்

கரணவாய், வியாழன்

கடந்த புதன்கிழமை உடுப்பிட்டியைச் சேர்ந்த இமையாணன் என்னும் இடத்தில் ஆசிரியர் எஸ். ஜேக்கப் பீ. ஏ. தலைமையில் "பாரதி கலாமன்றம்" அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மன்றத்தின் சார்பில் வருகிறமாதம் ஓர் சமூக நாடகத்தை மன்றத்தின் முதல் நாடகமாக அரங்கேற்றுவதென்று தீர்மானம் செய்யப் பட்டபின் கீழ்வரும நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்:- கு. சிவசம்பு. செயலாளர்:- வே. நடராசா. பொருளாளர்:- எஸ். ஜேக்கப். 6 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## லைபீரியாவில் புரட்சி நசுக்கப்பட்டது

லண்டன், செப். 28

லைபீரியாவில்புரட்சித்திட்டம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் உடனடியாக நசுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# பசுவின் கால்களை துண்டித்து 'டிக்கி'க்குள் போட்டனர்

## வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

பதுளை, வியாழன்

பாதையில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த பசு மாடு ஒன்றைத் துடிதுடிக்கப் பின் கால் இரண்டையும் தொடையுடன் துண்டித்து அவற்றைக் காரின் டிக்கிக்குள் இரத்தம் தோய்ந்த கத்தியுடன் வைத்திருந்ததாகப் பதுளை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மூவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

தியத்தலாவையைச் சேர்ந்த புறாக்சயிட் வாசிகளாகிய அரோல் பேர்ஸிவேல், டொனல்டுலின் சேகுனில், கத்தேவிஸ் ஆகிய மூவரும் இரவு ஒரு மணியளவில் காரில் வந்தார்கள்.

காகாத்தவெல கருணவதிக்குச் சொந்தமான பசுவொன்று மேய்ச்சலுக்காக அவ்வழியில் கட்டப்பட்டிருந்தது. காரில் வந்தவர்கள் பசுவைப் பிடித்து, பசு பதறப் பதற அதன் பின்னங்கால்கள் இரண்டையும் தொடையுடன் துண்டித்து எடுத்து கார் டிக்கிக்குள் போட்டார்கள். அக்கோரத்தைப் பார்த்திருந்த பண்டாரவளை பப்ளிக் சர்வீஸ் கிளப்பைச் சேர்ந்த ஆர். எம். திஸநாயக்கா பண்டாரவளை பொலிசுக்கு உடன் அறிவித்தார்.

பொலிசார் விரைந்து அக்கிளப்புக்கருகாமையில் நின்றுகொண்டிருந்த ஈ. என். 943 ம் நம்பருள்ள காரைச் சோதித்தார்கள். கார் டிக்கிக்குள் மட்டின் தொடைகள் இரண்டும் இரத்தம் தோய்ந்த கத்தியும் காணப்பட்டது.

பொலிசார் அவர்களை அக்காருடன் அழைத்து வந்து பண்டாரவளை அடிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள்.

மாஜிஸ்டிரேட் திரு. ஜே. பி. வி. சுவாரிஸ் மாட்டின் பாகங்களையும் கத்தியையும் பார்வையிட்டு எதிரிகளைத் தலா 200 ரூபாய் பிணையில் விட்டார்.

விசாரணை 2-10-61 ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

---

## இ. போ. ச. வுக்கு பிரயாணிகள் புகார்

கொழும்பு, வியாழன்

இ. போ. ச. பஸ்களில் பிரயாணிகளுக்கு இடவசதிகள் இருக்கும்சமயங்களிலும் அவை ஏற்றிச் செல்வதில்லை என்று பஸ் பிரயாணிகள் இ. போ. சபைக்குப் புகார் செய்துள்ளார்கள். பஸ் நிறுத்தும் இடங்களில் நிற்கும் பிரயாணிகளில் மூவர் நால்வருக்குமேல் பஸ் கண்டக்டர்கள் ஏற்றுவதில்லையென்று பிரயாணிகள் முறையிட்டுள்ளார்கள்.

இப்படியான புகார்கள் செய்யும் பிரயாணிகள் குறிக்கப்பட்ட பஸ்களின் எண்களையும் கூறவேண்டும் என இ. போ. ச. அதிகாரியொருவர் கூறியுள்ளதாகத் தெரிகிறது. பஸ் 'நம்பர்கள்' கூறப்படாததால், குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடாத்துவது சிரமமாக இருக்கிறது என அவர் தெரிவித்தார். பஸ்களில் இடம் இருக்கும்போது காத்து நிற்கும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லாத பஸ் கண்டக்டர்கள் மீது இ. போ. ச. கடும் நடவடிக்கை எடுத்துள்ளது என அவர் குறிப்பிட்டார். இவ்வாறு குற்றம் செய்த இ. போ. ச. சிப்பந்திகள் சிலர் வேலை நீக்கமும் செய்யப்பட்டுள்ளார்கள்.

---

## கிணறு கட்ட ஆறுயிரம் ரூபா உதவி

முள்ளியவளை, வியாழன்

தண்ணீரூற்றிலுள்ள குடியேற்றத் திட்டப்பகுதியான மக்கிக்கிடங்கு என்னும் மேட்டுப் பிரதேசத்தில், குடியேற்றவாசிகளுக்கென ஒரு பொதுக் கிணறு தோண்டிக்கட்டுவதற்காக, ஆறுயிரம் ரூபா அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மூலமே இத்தொகை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## புற்றுநோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணத்திலும் நிறுவப்படும்

கொழும்பு, வியாழன்

புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய சிகிச்சை நிலையங்கள் மூன்றை சுகாதார இலாகா நிறுவ இருக்கிறது. கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கும் இச்சிகிச்சை நிலையங்கள் புற்றுநோய் ஆராய்ச்சி சாதனங்களுடனும் நவீனவைத்திய வசதிகளுடனும் அமைக்கப்படும் ஒவ்வொரு சிகிச்சை நிலையத்திலும் விசேஷ வைத்தியர்களும் நியமிக்கப்படுவர். இப்போது இலங்கை முழுவதற்கும் ஒரேயொரு புற்றுநோய் சிகிச்சை நிலையந்தான் உண்டு. அது மகாரகமையில் அமைந்துள்ளது.

சுகாதார இலாகா, புற்றுநோய் தடுப்புத் திட்டமொன்றையும் உருவாக்கிவருகிறது. புற்றுநோய் ஆரம்பமாகும் காலத்திலேயே நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்க வைத்தியர்களுக்குப் பயிற்சியளிப்பதே இவர்களின் புற்றுநோய்த் தடுப்புத்திட்டத்தின் நோக்கமாகும். புற்றுநோய் தடுப்புப்பற்றிப் பொது மக்களுக்கும் இவர்கள் விளக்குவார்கள்.

---

## 3 குழந்தைகளும் கணவனும் பலி

கொழும்பு, வியாழன்

கணவனுடன் கோபித்துக் கொண்டு சென்ற காவத்தையைச் சேர்ந்த யசோகாமி என்றபெண், வீட்டுக்குத் திரும்பிவந்தபோது தன் 3 குழந்தைகள் வெட்டிக் கொல்லப்பட்டிருப்பதையும், கணவன் சமையலறையில் தூக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததையும் கண்டார்.

---

## செய்திச் சுருக்கம்

### உரிமைப் பிரச்சினை

சென்னை சட்ட சபையின் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் சபையின் உரிமையை மீறியதாக காங்கிரஸ் அங்கத்தினர் திரு. ஆர். ஸ்ரீனிவாச ஐயர் கொண்டு வந்த ஒரு உரிமைப் பிரச்சினை உரிமைக் கமிட்டிக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சபைக்கு வந்த அங்கத்தினர்களை உள்ளே பிரவேசிக்க விடாமல் வழி மறித்துப் பயமுறுத்தியதாய் அவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

### பஞ்சாயத்து சபைகள்

வருகிற திங்கட்கிழமை தமிழ் நாடு பூராவும் பஞ்சாயத்து சபைகள் செயலாற்றத் தொடங்கும். 12,500 க்கு மேற்பட்ட பஞ்சாயத்து சபைகள் அப்போது செயலாற்றும்.

### மாஸ்டர் மோகன்

மாஸ்டர் மோகன் என்ற யானைக்குட்டி தமிழ் நாட்டின் பரிசாக இன்று கனடாவுக்கு அனுப்பப்பட்டது.

### ஹமர்ஷீல்ட்

ஹமர்ஷீல்டின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறும்.